34

…TERED No. M. 6165. ந. பை. 13

34
4-5

# பத்ஹுல் இஸ்லாம்
# FATH-HUL-ISLAM

மாத பத்திரிகை

## அக்டோபர்—1958.

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| வீரத்தில் வல்ல சற்குண சீலர் ... ... ... | 1 |
| சிறைப் பறவை சிப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... | 9 |
| மாநிலம் மறக்க முடியாத மாவீரர் ... ... ... | 15 |
| தியாகத் தழும்பு — வேளாங்கண்ணி, கவிஞர் சாந்திதாசன் ... | 19 |
| தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள் (ரஹ்மத் பாகவி) ... ... ... | 29 |

4 - OCT 1958
MADRAS

… இஸ்லாம் ஆபீஸ்:
… ரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

JL
N158
187079

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1-50 |
| தனிப் பிரதி நயா பைஸா | | 0-13 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2-00 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.


## ஸீரத்துல் பாரூக்

இறுதிநபி நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய இரண்டாவது கலீபா வாகிய உமர் இப்னுல் கத்தாபு ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய சரித்திரம்.

இதில் அவர்களுடைய பிரபல்யங்களும், கீர்த்திகளும், வீரியங்களும், யுத்த சாமர்த்தியங்களும், தினில் வழுவாது நடக்கும் நீதிகளும் அடங்கியிருக்கின்றன. எல்லா முஸ்லிம்களுக்கும் அவர்களுடைய மகிமை புலப்பட்டிருப்பதால் அவைகளை இங்கு விரித்தெழுதவில்லை. இச்சரித்திரம் வாசிக்க வாசிக்க ஆனந்தத்தையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கு மென்பதில் ஐயமில்லை. இது இரண்டு பாகமாகும். முதல் பாகத்தில் அவர்களுடைய சரித்திரங்களும், இரண்டாம் பாகத்தில் அவர்களுடைய நீதிகளும் அடங்கி யிருக்கின்றன.

இரண்டு பாகமும் சேர்த்தது விலை ரூ. 3

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்-5.

الإسلام

# பத்ஹுல் இஸ்லாம்

அக்டோபர்—1958.

## வீரத்தில் வல்ல சற்குண சீலர்

சத்தியப் பிரசாரத்துக்கு மனத் தூய்மையும் வாக்கு வன்மையும் வேண்டும். பொது ஜனங்களுக்குப் புரியும் சேவை, சுயநலம் கலவாததாகவும் தூய்மையான தாகவும் இருக்க வேண்டும். இப்படிப் பட்ட சீரிய இலக்ஷிய முள்ள இயக்கங்கள்தான், உலகில் வெற்றி பெற்று நீடித்த காலம் நிலைத்திருக்கும்.

பரிசுத்த தீனுல் இஸ்லாம், இன்று உலகமெல்லாம் பரவி வியாபித் திருக்கிறது. இதற்குக் காரணம் அதன் சத்தியத்தன்மையும் தூய்மையுமே யாகும்.

இஸ்லாம் மதம், இயற்கைக்கு இசைந்த மதம். மனித வாழ்க்கைக்கு மிகவும் பொருத்தமான மதம். இஸ்லாம் மதத்தில் மனித வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா அம்சங்களும் முழுக்க முழுக்க அமைந்திருக்கின்றன.

இஸ்லாம் மதம் ஏகதெய்வ வணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஏகதெய்வ வணக்கமே, உலகில் அறிஞர்கள் எல்லோராலும், இனிய முறையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஏக தெய்வத் தியானத்தில் உள்ள மனோ அமைதி பலதெய்வ வணக்கத்தில் கிடையாது.

இஸ்லாம் மதம் புதிய மார்க்கமல்ல; அரபு அண்ணல் மகான் முஹம்மத் நபி (ஸல்) அவர்களால் சுயமே கற்பனை செய்யப்பட்ட புது மத மல்ல இஸ்லாம். ஆதி பிதா ஆதம் நபியும் ஏக தெய்வத்தையே வணங்கி வந்தார்; அதன் பின் நூஹு நபியும், இப்ராஹீம் நபியும், இஸ்மாயீல் நபியும், இறுதியாய் ஈஸா நபியும் கூட ஏக தெய்வத்தையே வணங்கி வந்தார்கள்.

எனவே, பொதுத் தத்துவப் பிரகாரம், யார் எச்சமூகத்தவராக இருந்த போதிலும், அவர்கள் ஒரே தெய்வத்தை மட்டும் வணங்கி நற்குண நல்லொழுக்கத்தோடு வாழ்ந்து வருவாரானல் இயற்கைப் பிரகாரம் அவர் 'இஸ்லாத்தின் வழியில்' செல்பவரே யாவர். அவர் தம்மை முஸ்லிம் என்று சொல்லிக் கொள்ளாமல் போயினும், அவர் ஒருவகையில் அல்லாஹ்வின் ஆக்ஞைக்கு கட்டுப்பட்டு நடக்கும் முஸ்லிமே யாவர்.

இத்தகைய அரும் பெரும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது இஸ்லாம் மதம். இஸ்லாத்தில் கொள்கையும் ஒழுக்கமும் தான் பிரதானம்; பெயரும் புகழும் பிரதானமல்ல. பெயரளவில் முஸ்லிமாக இருப்பதைவிட, அனுஷ்டான பூர்வமாய் முஸ்லிமாய் விளங்குவதையே, அல்லாஹு தஆலா விரும்புகின்ருன்.

ஏக தெய்வமாகிய அல்லாஹ்வின் மீது திட நம்பிக்கை வைத்து, மாந்தரின் தயாதாக்ஷிண்யத்துக்கு சிரம் சாய்க்காது, சத்தியத்தை நிலை நிறுத்துபவர், உலகில் எத்தகைய சக்திக்கும் எந்த விரோதிக்கும் எவ்வித சூழ் நிலைக்கும் பயப்பட வேண்டியதில்லை. உண்மையில், இத்தகைய தூய தன்மையும், தைரிய மனமும் உடையவர் உலகில் ஜெயம் பெற்று விளங்குவார்.

நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், முதன் முதன் ஏக தெய்வ வணக்கப் பிரசாரமே ஆரம்பித்தார்கள். தம் ௌவன பிராயத்தில், அரபு மக்களுக்கு ஏக தெய்வ வணக்கத்தைப் பற்றியே வற்புறுத்திப் பிரசாரம் செய்யத் தொடங்கினர்கள்.

தாம் புரியும் சேவை, மிகத் தூய்மையான தென்பதை எம் பெருமானர் (ஸல்) அவர்கள், மிகவும் நல்ல முறையில் உணர்ந்திருந்தார்களாதலால், சத்திய பிரசாரத்தின் போது நபியவர்கள்,

யாருக்கும் அஞ்சியதும் கிடையாது; தயா தாக்ஷண்யத்துக்காக தமது குறிக்கோளை நழுவ விட்டதும் கிடையாது.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தனித்தே இருந்து, ஏக தெய்வ வணக்கத்தை போதித்து, இஸ்லாத்துக்கு பாடு பட்டார்கள். அப்போது அவர்களுக்கு, பல தெய்வங்களை வணங்கி பல விக்கிரஹங்களை பூஜித்து வந்த முரட்டு அரபு ஜனங்கள் பெரும் எதிர்ப்புகள் புரிந்து வந்தார்கள். சத்திய திருப்போதகரான நபிகள் பெருமானார் மூஹம்மத் நபி (ஸல்) அவர்கள், இந்த அபார எதிர்ப்புக் கெல்லாம் சிறிதும் அஞ்சவே இல்லை. வாக்கும் மனமும் தூய்மை யுடையவர், யாருக்கும் எதற்கும் அஞ்ச வேண்டிய பிரமேயமே இல்லை யல்லவா.?

நமது நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், பாமர ஜனங்களுடன் பரஸ்பரம் அன்புருவாய்ப் பழகி, இதோபதேசம் புரிந்து வந்ததைப் போலவே, அக்காலை இஸ்லாத்தை எதிர்க்கத் துணிந்து பற்பல இடையூறுகளையும் போராட்டங்களையும் உண்டாக்கி, ஊறு விளைவித்து வந்த பகைவர்களுடன், நேருக்கு நேராய்- சரிக்கு சரியாய் நின்று போரிட வேண்டிய சமய சந்தர்ப்பமும் வாய்த்திருக் கிறது. அப்படிப்பட்ட சமயங்களில், சற்குண சீலர், சாந்த மண உத்தமர் எங்ஙனம் தம் வீரதீரப் பராக்கிரமத்தைக் காட்டி, ஜெயம் பெற்று விளங்கினார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

சத்குணத்தில் சீலராய் விளங்கிய, மகான் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், வீரதீரப் பராக்கிரமத்திலும் வல்லவராய் விளங்கினார்கள் என்பதை எடுத்துக் காட்டும் சில உண்மை வரலாறுகளையும், ஆதார முள்ள ரிவாயத்துகளையும் இங்கு எடுத்து விளக்குவோம்:—

(1) ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மாபெரும் வீரராகவும், பராக்கிரம சாலியாகவும், வீரப் புருஷராகவும் விளங்கி வந்தார்கள் என்பதற்கு 'ஸீரத்' சரித்திரமே ஆதாரமாகும். எம்பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹு தஆலாவைத் தவிர்த்து வேறெதற்கும் அஞ்சாதவராக இருந்து வந்தார்கள். இஸ்லாமியத் தப்லீக் பிரசாரத்துக்காக வேண்டி, தன்னந்தனியே, மூர்க்கர்கள் நிறைந்த அரபு கூட்டங்களுக்குள் பிரவேசித்து விடுவார்கள்.

விக்கிரக வணக்கஸ்தர்களின் திருவிழாக் கூட்டங்களிலும் போய், காபிர்களையும் முஷ்ரிக்குகளையும் வலிய அழைத்து அழைத்து, பிரசங்கம் செய்வார்கள். எதிரிகளின் கூட்டங்களில், காளைகள் மந்தையில் வேங்கை நுழைவதைப்போல், முஹம்மத் (ஸல்) தைரியமாய், நுழைந்து வருவதைக் கண்டு, அக்கால முஷ்ரிக்குகளும் காபிர்களும் பேராச்சரியப் படுவார்கள்.

பண்டை அரபு நாட்டுக் கடை வீதிகளில் சில நல்லோரும் இருப்பர்; பல பொல்லாரும் இருப்பர். மூர்க்கரும் முரடர்களும் இருப்பர். இவர்களுக்கெல்லாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறிதும் பயப்படாமல், பஜார்களின் முச்சந்திகளில் நின்று, இஸ்லாமிய ஏக தெய்வ வணக்கம் பற்றிப் பிரசங்கம் செய்வார்கள்.

(2) நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்கள் இஸ்லாம் பிரசாரம் தொடங்கிய போது, காபிர்களின் எதிர்ப்பு மிகக் கடுமையாக இருந்து வந்தது. குறைஷ் குலத் தலைவர்கள், முஹம்மத் (ஸல்) அவர்களை பகிஷ்காரம் செய்யவும், ஒத்துழைக்கா திருக்கவும் தலைப் பட்டார்கள். அப்போது, நபிகள் பெருமானாரின் சிறிய தகப்பனார் அபூதாலிப் மட்டும், உடந்தையா யிருந்து ஆதரவு அளித்து வந்தார். இதைக் கண்ட காபிர்கள், அபூதாலிபை தனிமையில் அழைத்து, நயத்தாலும் பயத்தாலும் அவரை தம்வசப்படுத்திக் கொண்டு, முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு உடந்தையா யிருக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டார்கள். அவ்வாறே, கிழவரான அபூதாலிப் இணங்கி விட்டார்.

எனவே, அப்பெரியவர், தம் பிள்ளை முஹம்மதை தனிமையில் அழைத்து உட்கார வைத்துக் கொண்டு, "மைந்தரே, குறைஷ் தலைவர்கள் உமது பிரசாரத்தை விரும்ப வில்லை. என்னையும் வற்புறுத்துகின்றனர். நானும் வாக்களித்து விட்டேன். ஆதலின் நீர், பல தெய்வ வணக்கத்தை எதிர்க்கும் பிரசாரத்தை விட்டு விடுவீராக" என்று சொல்லிப் பார்த்தார்.

அதற்கு எம்பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள், சிறிய தந்தை அபூதாலிபை நோக்கி, சொன்ன தைரியமான பதிலாவது:— "என் அருமைச் சிறிய தந்தையாரே! இவ்வுலக செல்வத்தையும், சுக போகத்தையும், அவர்கள் எனக்கு ஒருங்கே அளிப்பதாய் இருந்தாலும், நான் ஒருபோதும் என்னுடைய சத்தியப் பிரசாரத்தை விட

187079

மாட்டேன். ஏக தெய்வ வணக்கத்தை போதிக்கும் விஷயத்தில் யாருக்கும் அஞ்சமாட்டேன்; தாங்கள் எனக்கு ஆதரவு அளிக்கா விட்டாலும் சரியே" என்பதாகும்.

(3) ஹஜ்றத் அனஸ் (ரலி) அறிவிக்கும் ஒரு ரிவாயத்துச் சம்பவமாவது:—ஒரு முறை, மதீனு வாசிகள் பீதியடைந்து நடுங்கினுர்கள். காரணம் விரோதிப் பட்டாளம் ஒன்று, தாக்கும் நோக்கத்துடன் ஊருக்கு அருகில் வந்து விட்டதாகச் செய்தி பரவி விட்டது. எனவே, மதீனு வாசிகள் (முஸ்லிம்கள்) அப்போது, அதிகப் படை பலம் இல்லாதவர்களாய் இருந்ததால், நடு நடுங்கி விட்டனர். யாரும் வீட்டை விட்டு வெளிக் கிளம்பவும் தைரிய மில்லாதவர்களாய் விட்டனர்.

உண்மையில் விரோதிப் படையினர் வந்துள்ளனரா, இல்லையா என்பதைப் போய் கண்டறிந்து வந்து சொல்லவும் யாரும் துணியவில்லை. அப்போது அருங்குண சத்திய சீலரான நபிகள் பெருமானுர் முஹம்மத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், தன்னந் தனியாக, துணை யாரு மின்றி, தாம் மட்டும் ஹஜ்றத் அபூதல்ஹா வுடைய குதிரையின் முதுகின் மீது, யாதொரு ஜீன் கடிவாளப் பிடிப்பின்றி, ஏறிச் சென்று நேரில், குறிப்பிட்ட இடத்தில் போய் பார்த்து விட்டு வந்து செய்தி சொன்னுர்கள். அதாவது "லன்தராஊ" (தோழர்களே பயப்படாதீர்கள்; ஆபத்து ஏதும் கிடையாது) என்று தைரியம் கூறி ஆறுதலளித்தார்கள்.

(4) இதை யொட்டி ஸஹீஹ் புகாரி, முதல் பாகம் 300-பக்கத்தில் ஹஜ்றத் அனஸ் (றலி) அறிவிக்கும் ஹதீது ஒன்று காணப்படுகிறது.

"நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், மாந்தர்களில் மிக அழகானவராகவும், வீரர்களில் மிகச் சிறந்தவராகவும் இருந்தார்கள்" (என்பதே அவ்வாக்கியம்.)

இவ்வாறே, அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அறிவிக்கும் ஹதீதும் ஒன்று இருக்கின்றது. அதன் வாசகம் "நான், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் காட்டினும் மிக தைரிய சாலியையும் வீரமுடையவரையும் கண்டதில்லை" என்பதாகும்.

(5) ஹஜ்ரத் பராவு பின் ஆஜிப் (ரலி) அறிவிக்கும் ரிவாயத்து:- ஹுனைன் என்னுமிடத்தில் இஸ்லாமியப்போர் (ஜிஹாது)

நடந்து கொண்டிருந்த சமயம். எதிரிகட்கும் முஸ்லிம்களுக்கும் கடுமையான முறையில் கைகலந்து சமர் நடந்து கொண்டிருந்தது. நாங்கள், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஆதரவிலேயே, அவர்களுக்குப் பின்னுலேயே இருந்து போரிட்டுக் கொண்டிருந்தோம். நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் நின்று போர் புரியும் போது, ஆயிரம் பேர்களுடன் சேர்ந்து போர்புரிவது போல், எங்களுக்குத் தைரியமும் ஆறுதலும் ஏற்படும். படைக்களத்தில், நபி (ஸல்) அவர்கள், எல்லோரினும் முன்னுலேயே நின்று போரிடுவார்கள். மற்ருேரை முன்னல் விட்டுப் பின்னல் நிற்கும் குணம் நபி அவர்களிடம் கிடையாது.

(6) நபிகள் பெருமானர் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் காலத்தில் 'ரக்கானு' என்ருெரு மல்லன் இருந்தான். அவன் நாடெங்கும் முரடன் என்று பெயர் பெற்ற பயில்வான். அவன் அடிக்கடி, நபிகள் பெருமானரை அறைகூவி, சண்டைக்கு அழைப்பான். அரபிக் காபிர்கள், இவனை வைத்துக் கொண்டு பெருமை யடித்து வந்தனர். ரக்கானுவை ஜெயிப்பவர்க்கு ஒரு தொகை பணம் இனமும் தருவதாக ஜனங்கள் பிரகடனம் செய்தனர்.

இவன் அடிக்கடி, அவ்வாறு அறை கூறி அழைத்து வந்ததால், நபிகள் நாயகம் (ஸல்) அவனது பந்தயத்தை ஏற்றுக் கொண்டு விட்டனர். ஒரு சபை கூடிற்று. பலபேர் நின்று வேடிக்கைப் பார்க்க சேர்ந்தனர்.

அப்போது ரக்கானு என்னும், அந்த மல்லன், தோளையும் துடையையும் தட்டிக் கொண்டு, மிக ஆக்ரோஷ மாகவந்து கோதாவில் குதித்தான். நபிகள் பெருமானரும் கோதாவில், நிதானமாக இறங்கினர்கள். இருவரும் கைகலந்தனர்; அவன்தன் சரீர பலத்தினல், வித்தைகளைக் காட்டி நின்ருன். ஆனல் நாயகம் (ஸல்) அவர்கள், "பிஸ்மில்லாஹ்" என்று சொல்லி, அவனை அப்படியே தூக்கி, பூமியில் கிடத்தி, முதுகில் மண்படியச் செய்து விட்டார்கள்.

பஞ்சாயத்தாக கூடியிருந்தவர்கள், ஜெயித்த வருக்கு பரிசாக இனம் தொகையை, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சமர்ப்பித்தார்கள். நபிகள் பெருமானர் (ஸல்) அவர்கள், அதைப் பெற்று, தோற்றுப் போன பஹில்வான் ரக்கானுவிடமே, தன்னுடைய சார்பாக கொடுத்து உதவி, அவனை தட்டிக் கொடுத்தார்கள்.

ஆஹா, இதுவன்றோ வீரம், தீரம், பராக்கிரமம், தைரியம், தயாளம் எல்லாம்! உலகசரித்திரத்தில் இப்படிப்பட்ட, வீரத்தில் வல்ல சற் குணசீலர் ஒருவரை நாம் காணமுடியாது.

(இந்த வரலாறு, அல்லாமா ஸுயூத்தி இயற்றியுள்ள "அல்க ஸாயிஸ்" என்ற நூலில் முதல்பாகம் பக்கம் 121-ல் காணப்படு கிறது.)

(7) ஹுனைன் யுத்த களத்தில், முஸ்லிம்களுக்கு நெருக்கடி யான நிலை ஏற்பட்டது. ஸஹாபாக்கள், எதிரிகளின் எதிர்ப்பை தாங்க மாட்டாமல், படைகளத்தைவிட்டு ஓட்டம் பிடித்தார்கள். எதிரிகள் மிகக் கடுமையாய் முன்னேறி வந்தார்கள்.

இங்ஙனம், ஸஹாபாக்கள் சோர்வடைந்து, தோல்வி மனப்பான் மையை காட்டத் தொடங்கிய போதுங்கூட, நபிகள் நாயகம் ரஸூ லுல்லாஹி (ஸல்) அவர்கள், சற்றும் ஊக்கமும் உற்சாகமும் குன்று மல், வாளை உருவிப் பிடித்து, ஒரு உயரமான இடத்தில் நின்று கொண்டு, எதிரிகளை அறைகூவி அழைத்தார்கள்.

"அனன் னபிய்யு லாகதிப்
அனப்னு அப்துல் முத்தலிப்"

(நான் பொய் மொழி புகலாதவன்; உண்மை யாளன்; நான் வீரத்தில் சிறந்த அப்துல் முத்தலிபின் குமாரன்) என்று சுலோகம் சொன்னார்கள்.

இதைக் கேட்டு எதிரிப்படை நடுக்கங் கொண்டு விட்டது. துணைவர்களும் தோழர்களும் கைவிட்டு ஓடும் போது, இவர் ஒருவர் இங்ஙனம் மிகத்தைரியத்தோடு முன்வந்து, அறை கூவுவதன் மகிமையை எதிரிகள் உணர்ந்து கொண்டனர்.

பொதுவாக, வீரம் எனப்படுவது யாது? முரட்டுத்தனமும், போக்கிரிச்செயலும், மூர்க்க சுபாவமும் வீரத்தனமாகாது. அதெல் லாம் மிருகங்களுக்குரிய குணமாகும். புலியும் சிங்கமும், ஏமாந்த எளிய பிராணிகள் மீது பாய்ந்து கீறிக்கொன்று விடுவதை வீரம் தைரியம் என்று அறிஞர் யாரும் சொல்லமாட்டார்கள். ஆனால், திடமனமும், தைரிய உள்ளமும், தன் நம்பிக்கையும் பூண்டு, வலி யோனையும் எதிர்த்து நிற்கும் சுபாவத்தையே தைரியம் என்று யாரும் சொல்வர்.

அந்த வீரம் மனிதனிடம் தான் உண்டு. மிருகங்களிடம் கிடையாது. மனிதன், திடசித்தத்தினுலும் கம்பீரத்தினுலும், ஆண்மையினுலும் யானை, புலி, சிங்கம் முதலிய கொடிய மிருகங்களையும் அடக்கி ஆட்டி வைக்கின்ருன். யானை அத்தனைப் பெரிய ஸ்தூல மிருகமாய் இருந்தும், தைரியமுள்ள சிறிய மனிதனுக்கு அடங்கி விடுகிறது.

இத்தகைய சீரிய வீரசுபாவமே, நமது நபிகள் பெருமானுர் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் இருந்தது. அல்லாஹ்வின் மீது திடநம்பிக்கை வைத்து, எதற்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்தவர்களா யிருந்ததால், நாயகம் (ஸல்) அவர்கள், போர்ப்படைகளுக்கும் முரட்டுப் பயில்வானுக்கும் அஞ்சவில்லை.

இதிலிருந்து நம் முஸ்லிம்கள் படிப்பினை பெறவேண்டும். நற்குணத்தோடும், நற்செயலோடும், திடசித்தமும் தைரியமும் கொண்டு, இனிது வாழ்வோமாக. வஸ்ஸலாம்.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

## அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

### அத்தியாயம் 24.

கரீம் ஷரீபின் விருந்து அழைப்பு பற்றி சிப்கத்துல்லாவுக்கு கரீமுல்லாகான் கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதம் காலை, முதல் தபாலிலேயே சிப்கத்துல்லாவுக்குக் கிடைத்து விட்டது.

சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு கைகளில் முகத்தைத் தாங்கிப் பிடித்த வண்ணம் உட்கார்ந்திருந்த அவரது சிந்தனையைக் கலைக்காமல் பணியாள் பஹதூர்ஷா ஒதுங்கி நின்றான். கடிதத்தைப் படித்துக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட்டார்.

தம்மை எதிர் நோக்கிய பிரச்னைகளில் பெரும் பாலானவற்றை உவமை உருவில் அல்லது நேரடியாகப் பணியாளிடம் பகரும் பழக்கத்தைக் கொண்டிருந்தார் அவர்.

"சிங்கத்தின் குகையில் உன்னை விருந்துண்ணுமாறு அழைத்தால், நீ எந்த உடை உடுத்துக் கொள்வாய்" பணியாளைப் பார்த்து அவர் கேட்டார்.

அவரை பஹ்தூர்ஷா உற்றுப் பார்த்து உதட்டைக் கடித்துக் கொண்டு நின்றான்.

"அந்த விருந்தில் பெண்கள் பிரசன்னமாக விருப்பதைப் பொறுத்த விஷயம் அது. ஆரணங்குகள் அணி செய்யும் விருந்தாக விருக்குமானால், வெள்ளை ஷுர்வாலும் பட்டு ஷெர்வானியும் அணிந்து செல்ல வேண்டும்."

சிப்கத்துல்லா முணுமுணுத்துக் கொண்டார். "அம்மாதிரி விருந்துகள் நிகழ்ந்திருக்கின்றன, எஜமான்" பணியாள் பஹ்தூர் உண்மையான ஆர்வத்தோடு பேசினான். நான் சிறு பையனாக விருந்த பொழுது சர்க்கஸ் கம்பெனிக் காரர்கள் நடத்திய விருந்து எனக்கு இப்போது நினைவு வருகிறது. மூர்க்க மிக்க சிங்கங்களின் மத்தியில் நடத்தப்பட்ட அந்த விருந்து புதுமையானது. சிங்கங்களைப் பழக்குவோன் அவ்வைபவத்தில் உடுத்துக் கொண்டிருந்த உடை எனக்கு ஞாபக மிருக்கிறது. அவன் வெள்ளை ஷுர்வாலும் பட்டு ஷெர்வானியும் அணிந்திருந்தான்."

"சிங்கங்களைப் பழக்குவோன் விருந்து மத்தியில் சிங்கங்களை அவிழ்த்து விடுவதற்குத் திட்ட மிட்டிருந்தான் என்று வைத்துக்

கொள்வோம். அப்போது கவச மணிந்து செல்வதை நீ ஆதரிப்பாய் அல்லவா?”

இப்பிரச்னையை பஹதூர் சிறிது நேரம் அலசி ஆராய்ந்தான்.

“அத்தகைய விருந்து வினோதமானதாகவும் விபரீதம் விளைவிக்க வல்லதாகவும் இருக்கும். அத்தகைய சந்தர்ப்பங்களில் எந்த உடையும் அணிந்து கொள்ளலாம்; அது அனுமதிக்கப்படக் கூடியதேயாகும். ஆனால், என்னைப் பொறுத்தவரை, எந்த சந்தர்ப்பத்திலும், எக்காரணத்தை முன்னிட்டும், சிங்கங்களின் குகையில் விருந்துண்பதை நான் கனவிலும் கருத மாட்டேன்.”

“இந்த பதிலுக்காகத்தான் நான் இந்நேரம் காத்துக் கொண்டிருந்தேன். இன்று காலை நீ சொல்லிய புத்திசாலித் தனமான விஷயம் இதுதான். ஆயினும், மதியூகம் நிறைந்த உனது புத்திமதியின்படி நான் நடக்கப் போவதில்லை. வெள்ளிக் கிழமை ஜும்ஆவுக்குப் பிறகு, கிளப் இன்ஸானியத்தில் நான் விருந்துண்ணச் செல்லப் போகிறேன். இன்று காலைப் பத்திரிகையைக் கொண்டுவா. இன்னும் நான் பத்திரிகை படிக்க வில்லை.”

அசிரத்தையாக அவர் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார். அரசியல் அரங்கிலே எதிர் நோக்கி யிருந்த எண்ணற்ற பிரச்னைகளில் அவர் அக்கரை காட்ட வில்லை. உள்பக்கத்தில் காணப்பட்ட சிறு செய்தி அவரது கவனத்தையும் கருத்தையும் கவர்ந்தது. கடைசிச் செய்திப் பகுதியில் அச்செய்தி காணப்பட்டது. பிராட்வேயில் ஒரு வீட்டில் கன்னமிட முயற்சித்த கயவன் கையும் களவுமாகப் பிடிபட்டது பற்றிய சமாசாரம் அது. அக்கள்ளனின் பெயர் பஸ்லுர் ரஹ்மான் என்றும் குறிக்கப்பட்டிருந்தது. சிப்கத்துல்லா வருத்தத்தோடு காணப்பட்டார். திருடனின் அங்க அடையாளம் பற்றி அவருக்குச் சந்தேகம் எதுவும் கிடையாது; ஏனெனில் கொள்ளை நடத்துதலே பஸ்லுர் ரஹ்மானின் தொழிலாகவும் பிழைப்பாகவும் இருந்தது. அது அதிகாலையில் கிடைத்த செய்தியாக இருந்தமையால் திருட்டு பற்றிய விவர மெதுவும் கொடுக்கப் படவில்லை. பத்திரிகையைக் கீழே வைத்து விட்டு அவர் சிந்தனைக் கடலில் மூழ்கினார்.

பாவம், பஸ்லுர் ரஹ்மான்! அவன் திரும்பவும் நரக வேதனை அனுபவிக்க வேண்டியதாயிற்று. பஸ்லுர் ரஹ்மானின் கருத்துப்படி, புதுச்சேரி சிறையைவிட அது மேலானது. எனினும், அவன் மீண்டும் சிறைக்குள் செல்ல வேண்டியதாயிற்று.

அவர் கடிகாரத்தைக் கவனித்தார். மணி பதினொன்று ஆகியிருந்தது. மரியமை அன்று அவர் சினிமாவுக்கு அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடாகி யிருந்தது. அவளைக் கரீமுல்லா கான்

அழைத்து வருவதாகச் சொல்லி யிருந்தார், அவர்களிருவரையும் அவர் ஸெண்ட்ரல் ரயில் நிலையத்தில் சந்திக்க வேண்டும்.

டெஹ்ராடன் சிறையிலிருந்து விடுதலையாகிச் சென்னைக்கு வந்து சேர்ந்த பிறகு, மரியமுடன் அமைதியாகப் பேசுவதற்கு அவருக்குச் சந்தர்ப்ப மில்லாமற் போயிற்று. இன்று அக்குறை நீங்குகிறது. எனவே இன்று அவரது வாழ்க்கையில் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டிய தினமாகும். புகை வண்டி நிலையத்தில் அவர் சிறிது நேரம் காத்திருக்க வேண்டியதாக விருந்தது; ரயில் தாமதித்து வந்ததே அதற்குக் காரணம். பிளாட் பாரத்தில் நின்று கொண்டு வருவோர் போவோரைக் கவனித்துக் கொண்டிருந்த அவர் கடைகண்ணால் ஒருமனிதன் தம்மை நோக்கி வந்து கொண்டிருப்பதைக் கவனித்து விட்டார்.

விஞ்ஞானி, துப்பறிவோன், திருடன் ஆகிய மூன்று வகுப் பாருக்கு மிருக்கவேண்டிய ஆரும் அறிவை அவர் பெற்றிருந்தார். அந்த அவலட்க்ஷண ஆசாமி நெருங்கிவந்து வாய்திறந்து பேசு முன்பே, தூரத்திலிருந்த பொழுதே அவனை அவர் அடையாளம் கண்டு கொண்டு விட்டார். சமீபத்தில் அவன் வந்ததும், டெஹ்ரா டன்னில் பார்த்த மனிதன் அவன் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். பஸ்லுர் ரஹ்மான் சிறைக்கு வந்த அதேதினத்தில் அவனும் சிறைக்குள் தள்ளப்பட்டவன் என்பதையும் அவனும் அதே குற்றத்துக்காக தண்டிக்கப்பட்டவன் என்பதையும் அவர் தெரிந்து கொண்டார். அவர் விடுதலை யான சிறிது காலத்துக்கு பிறகு அவன் விடுதலை யானான்.

“காப்டன் சாஹிப். உங்களை நான் பின் தொடர்ந்து வந்தேன். ஆனால் வீதியில், எல்லோரும் பார்க்குமளவுக்கு உங்களுடன் பேசு வதற்கு நான் விரும்பவில்லை” மாலைப்பத்திரிகையைப் பார்த்தவாறு அந்த அன்னியன் சொன்னான். அவன் பேசியபோது உதடுகூட அசையவில்லை, அவ்வளவு மெதுவாக அவன் பேசினான்.

அவன் சொல்லப்போவ தென்ன வென்பதை சிப்கத்துல்லா ஆவலுடன் கேட்கக் காத்திருந்தார். அது பஸ்லுர் ரஹ்மானைப் பற்றிய விவகாரமாக இருக்கும் என்பதில் அவருக்குச் சந்தேகமில்லை.

“பஸ்லுர் ரஹ்மானை கயவனான கரீம் ஷரீப் காட்டிக் கொடுத்து விட்டான். பிராட்வேயில் ஒரு வீட்டில் வெள்ளிப்பாத்திரங்களை அபகரிக்கும் நோக்கத்துடன் அவன் சென்றான்; அவன் அங்கு செல்லுமுன்பே அவனுக்காக முன் வாசலில் விலங்குடன் சார்ஜன்ட் ஸிராஜித்தின் காத்துக் கொண்டிருந்தார்.

“அவனைக் காட்டிக் கொடுத்தது கரீம் ஷரீப் என்பது உனக்கு எப்படித் தெரியும்?” சிரத்தையுடன் சிப்கத்துல்லா விசாரித்தார்

"அது கரீம் ஷரீபின் முன் ஏற்பாடுஆகும். பஸ்லுர் ரஹ்மானை அந்த வீட்டுக்குத் திருட அனுப்பி விட்டு உடனே போலீஸாருக்கு கரீம் ஷரீப் தகவல் அளித்து விட்டான்" அந்த ஆசாமி சுருக்கமாகச் சொல்லி முடித்தான். "பஸ்லுர் ரஹ்மானுக்காக நீங்கள் ஒரு நல்ல வார்த்தை சொன்னால் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவனாக அவன் இருப்பான்."

"எவரிடம் நல்ல வார்த்தை சொல்லச் சொல்லுகிறாய்?" புன்னகையுடன் சிப்கத்துல்லா வினவினர். "தற்போதுள்ள நிலையில் எனது சொந்த சகோதரனுக்குப் பரிந்து நான் நல்ல வார்த்தை சொல்லமுடியாத நிலையில் இருக்கிறேன். என்னால் ஏதாவது செய்ய முடியுமானால் அவனைக் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கிறேன்."

அந்த அவலட்சண ஆசாமியைப் "போ" வென்று சொல்வதற்கு அவசியம் எழவில்லை. சிப்கத்துல்லாவின் கண்களில் ஏற்பட்ட பிரகாசத்தைக்கண்டு கொண்டு அதன் காரணத்தையும் தெரிந்து கொண்டு அவன் அங்கிருந்து நகர்ந்தான். வெகுதுரிதமாக நடந்து மரியமை அவர் அணுகினர். அவளது அழகை அவர் அனுபவித்து ஆனந்தித்தார். வசீகரமும் வனப்பும் மிகுந்த அவ்வனிதையை அவர் பார்த்துப் புள காங்கிதமடைந்தார்.

அவளை டாக்ஸியில் ஏற்றிவிட்டு, அவருக்கு கரீமுல்லா சைகை காட்டினர்.

"கிளப்விருந்து பற்றி என்னால் நிச்சயிக்க முடியவில்லை. காதல் விருந்து அளிக்குமளவுக்கு கரீம் ஷரீப் பரந்த நோக்கமுடையவன் அல்ல" அவர் ஆரம்பித்தார். இந்த விருந்து ஏற்பாட்டில் ஏதோ சூது இருக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது; அதற்கு நீர் ஆயத்தமாக இருக்கிறீரா?"

"ஆம்" என சிப்கத்துல்லா தலையசைத்தார். "கரீம் ஷரீப் வெளிப்படையாகப் பேசுவது வழக்கமில்லை. மரியமைப் பொறுத்த வரை, விவகாரத்தைத் தீர்த்து விடுவதற்கு அவன் முயற்சிக்கிறான் என்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது. ஆகவே, நாம் உஷாராக இருக்கவேண்டும்."

கரீமுல்லாவின் முகத்தில் கவலையின் ரேகை படர்ந்தது.

அங்கு விவகாரமெதுவும் தீராது:—கரீமுல்லா சுருக்கமாகச் சொன்னர், "காதர்கான் இருதாரங்களை மணந்திருந்தால் அதற்காக அவன் கைசேதப்படவேண்டி வரும். மரியமின் பெயர் பிரபல்யமாவதாக விருந்தாலும் நான் ஒருகை பார்த்து விடப் போகிறேன். புரிந்ததா?"

கை அசைத்துக்கொண்டே அவர் அங்கிருந்து அகன்றார்.

"என் தந்தை ஏன் அவ்வாறு கவலைப்படுகிறார்?" ஸ்டேஷனிலிருந்து டாக்ஸி கிளம்பியதும் அவள் கேட்டாள். "அவர் இப்போ

தெல்லாம் அமைதியாகவும் சிந்தனை யிலாழ்ந்தும் இருந்து கொண்டிருக்கிறார். என்னைப் பற்றித்தான் அவர் அனாவசியமாக கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். எனினும், எப்போதையும் விட இப்போது நான் மிகுந்த சந்தோஷத்தோடு இருக்கிறேன்."

"நீ குதூகலிப்பது ஏனோ?" சிப்கத்துல்லா சிரித்துக் கொண்டே வினவினார்.

"ஏனெனில், எனது திருமணம் செல்லுபடியாகாமற் போகிறது" அவள் ஆனந்தத்தோடு, ஆனால் நாணத்தோடு, சொன்னாள். திருமண எண்ணத்தை நான் வெறுத்தேன். அந்த திருமண ஏற்பாட்டை எவ்வளவு தூரம் வெறுத்தேன் என்பது உங்களுக்குத் தெரியாது. கண்ணிய மிக்க கனவானுக்கு என்னைக்கட்டிக்கொடுப்பதற்கு என் தந்தை எடுத்துக்கொண்ட சிரத்தையும் சிரமமும் எனக்கு இப்போது தான் விளங்குகிறது. எனது தந்தை அனேக சட்டவிரோதமான காரியங்களை—குற்றங்களை—புரிந்திருக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டு நான் வேதனைப்படுகிறேன், வெட்கம் கொள்கிறேன்."

"உனக்கு அது பெரும் அதிர்ச்சியாக இருந்ததா?"

"ஆம். ஆனால் அதிர்ச்சிகள் அனைத்தும் அடிகளைப் போன்றவை. அவை புண்படுத்துகின்றன, ஆனால் உடனே மறைந்து விடுகின்றன. நான்......"

"நான் திருடன் என்பதை நீ கண்டபோது......"

"நீங்கள்... என்று நான் கண்டபோது, என்ன பாடுபட்டேன் தெரியுமா? உங்களுக்கு அனேக அனுகூலங்கள் இருந்தன. நீங்கள் பட்டதாரி பண்பு மிக்க கனவான்—உங்களுக்கு அது பெரிதல்ல. எனது தந்தைக்குச் சாக்கு ஒன்று இருந்தது; தமது இளமை பற்றியும் இன்னல்கள் பற்றியும் அவர் எடுத்துரைத்தார். ஆனால் அவருக்கு இல்லாத வாய்ப்புகளை நீங்கள் பெற்றிருந்தீர்கள். குறுக்கு வழியில் பெறும் பணம் நல்ல பணம் அல்ல, அல்லவா?"

அவர் அமைதியாக விருந்தார். பின்னர், பெருமூச்சு விட்டு விட்டு அவள் மீண்டும் புன்னகை புரிந்தாள்.

"உங்களிடம் பிரசங்கம் நிகழ்த்துவதற்கு நான் துணியவில்லை; உங்களிடம் அதைப்பற்றி நான் கேட்கவும் போவதில்லை. எனக்காக எதிர் காலத்திலாவது நீங்கள் நேர்மையான வாழ்க்கை மேற்கொள்ளுங்கள் என்று நான் கேட்கத் துணிய வில்லை. ஏனெனில்—அவள் முகம் நாணத்தால் சிவந்தது "கதைப் புத்தகங்களில் வரும் தேவ கன்னிகளைப்போல் காரிய மெதுவும் நான் செய்யப் போவதில்லை— அதாவது உங்களைத் திருத்துவதற்கு நான் கங்கணம் கட்டிக் கொள்ளப் போவதில்லை."

"நான் காப்பாற்றப்பட்டு விட்டேன்" அவர் புதிர் போட்டார். "நீ சொல்வது முற்றிலும் சரி. நான் ஏன் திருடனாக இருக்க வேண்டு மென்பதற்குக் காரணமே யில்லை, சமய சந்தர்ப்பங்கள் சதிசெய்த தால் நான் திருடனானேனே யொழிய வேறில்லை. நேர்மையான பாதையினின்று நான் ஏன் விலகிச் சென்றேன் என்பதை பிறகு ஒரு நாள் உன்னிடம் விளக்கி, விவரமாகச் சொல்கிறேன். அது மிக நீண்ட, வினோதமான கதையாக விருக்கும்."

அவர் வாழ்க்கையில் வழுக்கி விழுந்தது பற்றிய பிரஸ்தாபத்தை அவள் மீண்டும் எழுப்ப வில்லை. விருந்தின்போது அவள் சந்தோஷ மாகவே சம்பாஷித்துக் கொண்டிருந்தாள். தர்ம காரியத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு விழாவில் அவளை அவர் முதன் முறையாகச் சந்தித்திருந்தார். துப்பாக்கி சுடும் போட்டியில் வென் றமைக்காக அவருக்கு அளிக்கப்பட்டிருந்த மோதிரத்தை அவர் அன்புக் காணிக்கையாக அவளுக்கு வழங்கி யிருந்தார். அந்த மோதிரம் இன்னும் அவளது அழகிய விரல்களுக்கு அணிசெய்து கொண்டிருந்ததைக் கண்டு களிப்படைந்தார். அந்த மோதிரத்தின் விலை அற்பம். ஆயினும் அவளது அழகிய கரத்தில் அது இருப் பதைப் பார்த்து அவர் அளவில்லா ஆனந்தம் அடைந்தார்.

விருந்து சாப்பிட்ட பிறகு அவள் மீண்டும் பழைய துரதிர்ஷ்ட சம்பவத்தைக் கிளறினாள்.

"நீங்கள் மிக உஷாராக இருக்கப் போகிறீர்கள் அல்லவா? காதர் கான் உங்கள் மீது பகைமையும் வெறுப்பும் கொண்டிருப்பதாக எனது தந்தை சொல்கிறார், உங்களுக்கும் எனக்கும் கெடுதல் விளை விப்பதற்கு காதர் கானும் அவரது தந்தையும் பின்னடைய மாட் டார்கள் என்றும் அவர் தெரிவிக்கிறார்."

மேஜை மீது கைஊன்றிக் கொண்டு மிக மெதுவான குரலில் அவர் வினவினார்: "மரியம், இந்த விவகாரம் திருப்திகரமாகத் தீர்ந் ததும்— விவாக பந்தத்திலிருந்து விடுதலை பெற்றதும்— என்னை— நான் எவ்வாறாக இருந்த போதிலும்—ஏற்றுக் கொள்வாயாக."

அவரது கண்களும் அவளது கண்களும் ஒன்றாகச் சந்தித்தன. "ஆம்" என்பதற்கு அறிகுறியாக அவள் தலையசைத்தாள்.

ஸ்டேஷனிலேயே அவர்களிருவரையும் பார்த்துவிட்ட காதர் கான் அவர்களைப் பின்தொடர்ந்து வந்திருந்தான். ஹோட்டலின் பக்கத்து அறையிலிருந்து அவர்களது பேச்சை ஒற்றுக் கேட்டுக் கொண்டிருந்தான் அவன். அவர்கள் இருவரும் இருந்த நிலையைக் கண்டு நிகழ்ந்தவற்றை அவன் ஊகித்து உணர்ந்து கொண்டான்.

(தொடரும்)

## மாநிலம் மறக்க முடியாத மாவீரர்

[12]

மற்றவர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிக்கும் உயரிய பண்பும் அவரிடம் இருந்தது. அவரால் ஊக்குவிக்கப்பட்டு முன்னுக்கு வந்தவர்களிலொருவர் ஹென்ரி போர்டு ஆவார். எடிசன் கம்பெனியின் கூட்டத்தில் அவ்விருவரும் சந்தித்தார்கள். அக் கூட்டத்தில் தமது புதிய சேமிப்பு பாட்டரி பற்றி விளக்கி, மின்சார மோட்டாருக்கு இதை உபயோகிக்கலாம் என எடிசன் யோசனை கூறினர். மின்சாரத்தால் இயங்கும் கார் ரஸ்தாக்களில் போய் வந்து கொண்டிருக்கும் காலம் சீக்கிரம் வரும் என மோட்டார் தொழில் அதிபர்கள் திட்டமாக எண்ணி யிருந்தனர். ஆனல் வாலிபரான போர்டு வேறுவித எண்ணங் கொண்டிருந்தார். பெட்ரோல் எஞ்சின் கொண்டு கார்களை இயக்க முடியும் என்ற தமது சித்தாந்தத்தை எடிசனிடம் போர்டு கூறினர். அவரது சித்தாந்தம் காரிய சாத்திய மானதாக விருந்தால் மின்சாரகார் காலம் ஏற்படுவது முடியாத காரியம் என்பது தெளிவு. ஆனல் இவ்விஷயத்தில் போர்டு கூட நிச்சய மில்லா திருந்தார். விரிவான பரிசோதனைகள் நடத்திப் பார்த்த அவர் மனமுடைந்து, அதைரியத்தோடு காணப்பட்டார்.

அப்போது, புகழேணியின் உச்சிப் படியில் வீற்றிருந்த எடிசன் கையைக் குவித்து ஒரு காதால் அவர் கூறி வந்ததை உற்றுக் கேட்டார். திடீரென அவரது மூடிய முஷ்டி மேஜையைத் தாக்கிப் பலத்த சப்தம் உண்டாக்கியது எடிசன் சொன்னர்:—"வாலிபரே! நீர் கூறுவது அனுபவ சாத்தியமானது. எனவே, உறுதியுடன் முயற்சி செய்து பாரும். பாட்டரிகளுக்குத் திரும்பவும் சக்தியளிப்பதற்காக மின்சார நிலையங்களுக்கு அருகிலேயே மின்சார கார்கள் இருந்து கொண்டிருக்க வேண்டும். சேமிப்பு பாட்டரியும் மிகவும் கனமானது. உமது கார் சுயநிறைவுடையதாக விருக்கிறது, மேலும், விசை உற்பத்தி சாதனமும் அந்தக் காருக்கு உள்ளேயே இருக்கிறது. ஆகவே, உறுதியுடன் செயலாற்றும்."

இச்சம்பாஷணையால் புத்துயிர், புத்துணர்ச்சி பெற்ற போர்டு உறுதியுடன் செயலாற்றினர். அவரது வாழ்க்கையில் புதியதொரு அத்தியாயம் துவங்கியது. உற்சாக வார்த்தைகள் கூறி ஊக்க மூட்டியமைக்காக எடிசனிடம் எப்போதும் அவர் நன்றியறிதலுடன் நடந்து கொண்டார்.

எடிசனைவிடப் பதினறு வயது இளையவரான ஹென்றி போர்டு, எடிசனிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். மின்சார

விளக்குகள் கண்டு பிடிக்கப்பட்ட ஐம்பதாவது ஆண்டு பூர்த்தி விழாவை யொட்டி, மிச்சிகனிலுள்ள டியர் பார்னில் எடிசனின் ஆரம்ப வாழ்க்கையையும் சாதனைகளையும் விளக்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கிராமத்தை நிர்மாணித்தார். பெரும் பொருள் செலவிட்டு மென்லோ பார்க் ஆராய்ச்சிக் கூடத்தை அப்படியே தத்ரூபமாக மீண்டும் நிர்மாணித்தார். ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்தது போலவே எல்லா காட்சிகளும் தத்ரூபமாக இருந்தன.

இக்கண் காட்சியைக் கண்ணுற்றதும் எடிசன் பிரமிப்படைந்தார். சரித்திரம், பழைய நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் ஹென்றி போர்டு கொண்டிருந்த அக்கரையை எடிசனால் புரிந்துகொள்ள முடிய வில்லை. புதிய, புதிய விஷயங்களில் கவனம் செலுத்திப் பரிசோதனை நடத்தி வந்த எடிசனுக்குப் பழைய விஷயங்களை நினைத்துப் பார்க்கக்கூட நேரம் இருந்ததில்லை.

காது கேட்கச் செய்யும் கருவிகளை உபயோகிப்பதற்கு எடிசன் மறுத்து விட்டார். தமது செவிட்டுத் தன்மை ஒருவகையில் ஆசீர்வாதம்தான் என எண்ணினார் அவர்- தொழிற் சாலையில் ஜரூராக வேலை நடைபெற்றுக் கொண்டிருந்த போதும்கூட அமைதியாக அமர்ந்து அவரது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்க வசதி செய்தது அவரது செவிட்டுத் தன்மையே அல்லவா? பொது விருந்துகளைப் பிற்காலத்தில் அவரால் தவிர்த்துக் கொள்ள இயலாமற் போயிற்று. அந்த விருந்துகளுக்குச் சென்றிருந்த போதும் கூட அவரது செவிட்டுத் தன்மை அவருக்கு அனுகூலமாகவே யிருந்தது. ஒருநாள் காலை ஒரு பத்திரிகையை எடுத்து அவரது சகாக்களிலொருவர் மீது வீசி அவர் பின்வருமாறு கூறினார்: இந்த தகவலை நீர் படித்துப் பார்த்தீரா? நேற்றிரவு அந்த விருந்துபசாரத்தில் நானும் கலந்து கொண்டிருந்தேன். பிரசங்கியின் வடது புறத்தில் நான் உட்கார்ந்திருந்தேன். அந்தப் பிரசங்கியின் வாயிலிருந்து வெளி வந்த ஒரு வார்த்தையைக் கூட நான் கேட்கவில்லை. இதற்காக இறைவனுக்கு நான் நன்றி செலுத்திக் கொள்கிறேன், காது கேட்கச் செய்யும் கருவிகளை நான் அணிந்து கொள்ள வேண்டு மெனச் சொல்கிறார்களே அவர்களது யோசனைப்படி நடந்தால் என்கதி என்னவாகும்?”

கட்டுமஸ்தான தேக அமைப்பு அபார மூளை ஆகியவற்றால் எண்பத்து நான்கு வயதுவரை ஏற்பட்ட கஷ்டங்களையும் கடும் சோதனைகளையும் அவரால் சமாளித்துக் கொள்ள முடிந்தது. அவரது தாத்தா நூற்று நான்கு வயதுவரை வாழ்ந்திருந்தார். எனவே இந்த உண்மையைக் கவனத்தில் கொண்டு எழுபது வயதான பிறகும் கூட தம்மை வாலிபராக நினைத்து எடிசன் சுறுசுறுப்பாகச் செயலாற்றி வந்ததில் ஆச்சரிய மெதுவும் இல்லை அல்லவா?

தமது எழுபத்து ஐந்தாவது வயதில் வேலை நேரத்தைப் பதினாறு மணியாக அவர் குறைத்துக் கொண்டார். எண்பதாவது வயதில், நீண்ட நேரம் வாசிக்கக் கூடிய முதல் கிராமபோனை அவர் செய்து முடித்தார். முப்பத் தெட்டு செண்டுக்கு அதை ஒருவர் கிரயம் வாங்கினார்; நாற்பது நிமிட நேரம் இன்னிசை முழங்கக் கூடிய கிராமபோன் அது.

"பல்லாண்டு காலம்வரை ஆராய்ச்சிக் கூடங்களில் இடைவிடாமல் பரிசோதனை நடைபெறச் செய்யு மளவுக்கு என்னிடம் ஏராளமான கருத்துக்கள், திட்டங்கள் இருக்கின்றன" என்று எடிசன் இயம்பினார்.

உண்மையை உரைக்கு மிடத்து, எண்ணங்களுக்கும் திட்டங்களுக்கும் அவரிடம் பஞ்சமே இல்லை. தமது ஜீவிய காலத்தில் ஆயிரத்துத் தொண்ணூற்றே கருவிகள், கண்டு பிடிப்புகள் குறித்து அமெரிக்கா அரசாங்கத்திட மிருந்து அவர் ஏகபோக உரிமை பெற்றிருந்தார் என்பதிலிருந்து அவரது அபாரத் திறமையைத் தெரிந்து கொள்ளலாம்.

கடவுள் மதம் பற்றி எடிசனின் கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்கும் பத்திரிகை நிருபர்கள் முயற்சித்தனர். அவர்களிடம் அவர் கூறியது இதுதான்; "இயற்கையின் போக்குகளைப் பல்லாண்டுகளாகக் கவனித்து வந்ததிலிருந்து சர்வ வல்லமையுள்ள பரம்பொருள் இருக்கிறது என்பதில் நான் சந்தேகம் கொள்ள முடியாது. அத்தகைய கடவுள் இருக்கிறார் என்பதை ரசாயன சாஸ்திரத்தின் உதவியால் அனேகமாக நிருபிக்க முடியும் என நான் கருதுகிறேன்" ஆனால், இதைப் போன்ற பிரச்னைகளில் கூட அவரது நகைச்சுவை வாளாவிருந்ததில்லை. மின்னல் கடத்தி (Lightning Conductor) தொழிலில் மாதா கோவில் முதலீடு செய்யலாமா என மத குரு ஒருவர் வினவியபோது, எடிசன் பின்வருமாறு பதில் அளித்தார்: "தாராளமாக முதலீடு செய்யலாம். கடவுளுக்குக் கூட கவனப் பிசகு (மறதி) ஏற்படுவது சகஜம்."

மரணமடைவதற்கு ஒருவாரத்துக்கு முன்பு வரைகூட சுய முயற்சியால் கல்வி கற்பதை அவர் கைவிடவில்லை. ஏழாவது வயதிலே, இரண்டு மாதப் பாடசாலைப் படிப்புக்குப் பிறகு உபாத்தியாயரால் கைவிடப்பட்டு, பெற்ற தாயாரிடம் எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டது முதல் துவங்கிய இந்த சுயமுயற்சி அவரது மரணவேளை வரை தொடர்ந்து நீடித்தது. மரணப் படுக்கையில் இருந்தபோது கூட பல விஷயங்களைப் பற்றிப் பல புத்தகங்களையும் கவனமாகப் படித்து வந்தார்.

அவரது அவா, ஆவல்— அதாவது எந்த விஷயத்தையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அபிலாஷை— அவரது வைத்தியர்களுக்குச் சங்கடம் அளிப்பதாக விருந்தது. தமக்கு

நோய் ஏன், எவ்வாறு ஏற்பட்டது என அவர்களை அவர் கேள்விகள் கேட்க ஆரம்பித்து விட்டார். தமது உடல்நிலை பற்றிய அறிக்கையையும் அவரே தயாரித்து வைத்துக் கொண்டார். மருந்துகள் பற்றிக் கூட வைத்தியர்களுடன் அவர் வாதம் செய்யலானார். இரத்தப் பரிசோதனை அவருக்குச் சங்கடமாக விருந்தது. தமது உடற் பரிசோதனையின் போது எடுக்கப்பட்ட படங்களைத் தமக்குக் காட்ட வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தினார். காலனின் அழைப்பைச் செவியுற்று அவனைக் கூட அலைக்கழித்திருப்பார் என்று கருதக் கூடிய அளவுக்கு மரண வேளையில் கூட அவர் உஷாராக இருந்தார்.

தமது எண்பத்து நாலாவது வயதிலே 1931-ம் வருடம் அக்டோர் மாதம் 18-ம் தேதி யன்று எடிசன் இறுதியாத்திரை புறப்பட்டார். அவரது பிரேத அடக்கதின இரவில் அமெரிக்க ஜனாதிபதி ஹூவரின் பிரகடனத்துக் கிணங்க, எடிசனுக்கு—ஐம்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நகரைப் பிரகாசிக்கச் செய்த மனிதருக்கு—மரியாதை செலுத்தும் வகையில் ஒரு நிமிடநேரம் விளக்குகள் எரியவில்லை. மென்லோ பார்க்கிலே முதல் முறையாக விளக்கு எரியச் செய்யப்பட்ட தினத்தில் தான் இவ்வாறு எடிசனுக்கு மரியாதை செலுத்த விளக்குகள் அணைக்கப்பட்டு ஒரு நிமிடத்துக்குப் பிறகு மீண்டும் எரிய விடப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத் தக்க விஷயம்.

மாநிலம் மறக்க முடியாத மாவீரர் முற்றிற்று.

---


## ஸப்அ ஸனாபில்

(ஹனபி மதுஹபுக்குரியது)

இந்த புஸ்தகத்தில் ஏழு புஸ்தகங்கள் அடங்கியிருக்கின்றன. அவைகள்: (1) ஜரூருல் மூமினீன் (2) ஜரூருல் முஸ்லிமீன் (3) ஜரூருல் முஸல்லீன் (4) ஜரூருஸ் ஸாயிமீன் (5) ஜரூருல் முஜக்கின் (6) ஜரூருல் ஹாஜ்ஜீன் (7) ஜரூருத்தாயீன்.

இத்துடன் அம்மயத் ஜுலூஸு, ஈடேற்ற மாலை இவைகளும் ஞானரத்தின குறவஞ்சி, ஞான ஆனந்தக் களிப்பு, திருமெஞ்ஞான சரநூல், ஞான நடனம் இவைகளும் சேர்ந்திருக்கின்றன. விலை ரூ. 3

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# தியாகத் தழும்பு!

[வேளாங்கண்ணி, கவிஞர் சாந்திதாசன்]

## அத்தியாயம்—1

## "இசை அலையினூடே"

"திருச்சியை நோக்கித்திரண்டு வாரீர்"! என்னும் 'திருமுக அறிக்கை' யினைக் கண்ணுற்று தெளிவு பெற்ற சன்மார்க்க சாரணர்கள் தங்களது ஊர்கள் தோறும் ஆங்காங்கு அவற்றின் கிளைக் காரியாலயங்களை நிறுவி, பட்டித் தொட்டிகள் எங்கனும் மீண்டும் "பச்சிளம் பிறைக்" கொடியின் நிழலிலே ஓர் முகமாக அணி வகுத்து நின்றிருந்த இஸ்லாமிய இளைஞரேறுகளின் இதயங்களை குறிப்பாக—"தினம்–தினம் பாடுவோம்; திரு நபியை நாடுவோம்! தேனும் மதுர 'குர்ஆனை' சதா ஏந்து வோம்!!" என்னும் தலையங்கம் பூண்ட பாடலின் தொடர், சொற்சுவை–பொருட்சுவை குன்றாது இசை யோசை யோடு அந்த "வளவனூர்" வட்டாரத்திலிருந்து எழுந்து, மலைய மாருதத்தின் தழுவலிலே மிதந்து வந்து உணர்ச்சி யூட்டி உலுக்கிற்று.

வீதிகள் தோறும் விநோதக் கைத்திறன்களைக் காட்டும் தோரணங்கள்! .........தெருவீதிகள் முழுவதையும் மாளிகையாக மாற்றி மெருகிடும் மூடு பந்தல் கொட்டகை!! அப்பந்தலினூடே விந்தை ஒளிக்காட்டும் மின்சார சாதனங்கள்! சுற்றிலும் "இஸ்லாம் வாழ்க"! "இறை மறை ஒளிர்க"!! என்னும் பொன்மொழி களைத் தன்னகத்தே தாங்கி ஒய்யார எழில் சிந்தும் "போர்ட் பலகைகள்"! இத்தியாதி வைபவங்களுக்கிடையே—உயர்ந்த மேடை மீது ஆசனங்களிலே, ஆற்றல் கெழுமிய சொற்பொழி வாளர்களும், ஆலிம்கள், உலமாக்கள், இன்னும் பற்பல பெரியோர்களான பேறிஞர்களும் முகவிதானத்திலே புன்னகைத்தவழ வீற்றிருக்க! உணர்ச்சி வெள்ளத்திலே ஆங்கு குழுமியுள்ள மக்கள் மெய்மறந்து இருக்க, ஒலிப்பெருக்கியின் எதிரிலே இலட்சியப் பாடகர்—எந்தவர் இதயத்தையும் ஈர்க்கும் "இசை அமுதன்" ரஹீமின் அதரத்திலிருந்து "அனலைப் பொழிந்தப் பாலைவனத்தில் உதித்த ஆட்சி—ஆத்மீகத் துறை ஐம்பது கோடியாச்சி—தனதுயர்வில் வேறு சமுகம் காணு மீட்சி"! மீண்டும் வெளிப் போந்த இச்சொற்றொடர் கைத்தட்டும் மக்களின் கரகோஷத்தினூடே இரண்டறக்கலந்து விடுகிறது. இசை முழக்கம் செய்த இளம் பாடகர் பந்தலை நோக்கி

வருகின்றார். மக்கள் மன்றத்தையும், அவர்களது இன எழுச்சியின் பற்றுதலையும் பார்த்து முறுவலித்து, தன்னுள் வியந்தவாறு ஆங்கொரு நாற்காலியிலே அமர்ந்து விடுகின்றார். இந்த இளம்வயதிலே என்ன இனிமை? ......என்ன சாரீரம்......? இப்படி அவரை வியந்துப்பாராட்டுகின்றனர் மக்கள் வர்க்கம். ஆம்! திருச்சி "வானொலி நிலையம்" தந்து விட்ட இசைத்திரு வுருவல்லவா அவர்......!

மறைதிருவசன விளக்கத்திற்குப்பின்னர். தகுதி சான்ற தலைவர் அவர்களே! தன் நலம் கருதா தியாக மரபினர்களே!! என்று திடுமெனத் தொடங்கியக் குர லொலி அங்கிருந்த ஆயிரமாயிரம் கண்களை ஊடுருவிச் சென்றன. எண்ணூறு ஆண்டுகள் எழிலரசோட்சிய நாம்! இருப்பிடத்தையே தங்களது இராஜபோக அறமனைக கற்பனைக் கண்கொண்டு நோக்கிய எத்தர்கள் ஒரு சிலரால் ஏமாற்றப்பட்டோம். பிறகு கூறவும் வேண்டுமா? ஈட்டிமுனைகளின் நடுவிலே—இட்ரி விழாது படுக்குழிகளின் வாசலிலே நெஞ்சுயர்த்தி நிமிர்ந்து நின்று போராடத்தான் செய்தோம் என்று அக்குரல் சிந்தனையைத் தூண்டிவைத்துவிட்டு சில நிமிடம் நின்றது. அந்த இடை வெளிசந்தர்ப்பத்தைப்பயன் படுத்தி "ஈட்டி முனையிலே—நிறுத்திட்டபோதிலும் ஈமானை இழந்திடமாட்டோம்"! "என்று" "இசை முரசு" ஹனிபாவின் இன்னிசை நெஞ்சைத்தொட்டு விட்டு ஒலி வரிசையிலே ஓய்வு பெற்றது. "புலவர்க்கோட்டை"யின் புது திருப்பம் தந்த பொக்கிஷ மல்லவா அவர்? ஓய்வு பெற்ற உரை நடைக்குரல் எழுந்தது. பொறுமையிழந்தோம், சிற்சில கட்டாய நிபந்தனையின் நிமித்தம் போர்க் கோலமும் பூண்டோம். எனினும், எப்படியோ; அன்னிய ஏகாதிபத்தியத்தின் கொடுங்கோன்மைக்கு இலக்காகி; அவர்களின்அடிமைப்பிடியிலே முன்னூறு ஆண்டுகள் மோதிக்கிடந்தோம். அடுத்து நிறபேத மற்ற ஐக்கியத்தின் கூட்டுறவிலே அறுபது ஆண்டுகள் நீதிப்போதம் புரிந்து, இத்தாய கத்தை நமதாக்கி, இன்றைக்கு பத்து ஆண்டுகள் பூர்த்தி ஆகியுள்ளன. ஆயினும், கடந்த ஈராண்டுகளாக—ஆட்சி முறையினையும் மாற்றியமைத்து, மத, இனரீதி அடிப்படையிலேயே ஒவ்வொரு குழுவினர்களும் தங்களது கொள்கையினை வலியுறுத்திச் செல்வதால்; நாமும் இனிமேல் வாளாயிருக்க இயலாது. நமது இன சக்தியை ஒன்று திரட்டவே இம்மாபெரும் மாநாடு நிருபர்கள் சகிதம் நிறுவப்பட்டுள்ளது.

"இன்னமல் முஃமினீன—இஃவதுன்"! மூமீன்; முஸ்லிம்களாகிய நீங்கள் அனைவர்களும் ஒரே அன்னை; தந்தை வயிற்றில் அவதாரமெடுத்தவர்களாவீர்கள் என்றும் மறையின் மணிமொழியை நிரூபிக்க, "வதீவுல்லாஹா—வஅதீவுர்ரசூல வவுலுல் அம்ரிமின்கும்"! எமக்கும்—எமது தூதராகிய பெருமானார் நபி (ஸல்) அவர்களுக்கும்; உங்கள் தலைவர்களுக்கும் கீழ்படிந்து நடக்க

கடவீர்கள் என்று அதே மறைவழியாக இறைவன் தரும் நன் னெறியைக் கடைப்பிடிக்க இதோ தயாராகி விட்டோம். இன் றைய ஒப்பற்ற நமது தலைவர் "காயிதே மில்லத்" அவர்கள் தான். காவலைசத்தால் இந்நாட்டையே அசைக்கமுடியும் என்று தான் கூறு கின்றேன். ஆம்; அத்தகைய ஆற்றல்படைத்த ஒருவரைக்கண் டெடுத்தோம் ஒரு குண்டு முத்தாக என்று ஏறுநடையிலே இளங் காளை அமீருத்தீன் முழக்கமிட்டுக் கொண்டிருந்தான். இரவு நேர மாகிவிட்டதை எடுத்துக்காட்டி, அந்த நேரத்திற்கு இலக்கணம் கூறுவது போன்று "காலம் காட்டும் கருவி" பத்து முறை ஒலி எழுப்பி ஓய்ந்தது. "அல்லாஹு அக்பர்"! என்னும் முழக்கங்கள் விண்ணைப்பிளக்க ஆண்களும், பெண்களுமாக பந்தலை விட்டு அணியணியாக வெளியேறிக் கொண்டிருந்தனர்.

"அல்லாயாரறிவார் உந்தன் நீதி ஒரு சொல்லாலே—எல்லாம் தந்த வல்லவனே நீயே அல்லா"!" என்னும் அந்த நேரநிகழ்ச்சிக் கேற்ப கருத்தாழம் நிறைந்துள்ள பல்லவித்தொடர் மேடையிலி ருந்த இசை தட்டிலிருந்து மதுரகானமாக "இசை மணி"—சன் மார்க்க சங்கநாதம் ஹுசைன் தீனின் அதரத்திலிருந்து நெளிந் தோடி—உண்மையாளர்களின் இதயத்திலிருந்து உதிரப் பிரவாகம் எடுத்தோடிக் கொண்டிருக்கச் செய்தன.

நடுநிசி! "பால் வண்ணனின்" பவனியால் விண்ணகமும்— மண்ணகமும் ஒரே ஒளிவெள்ளத்தில் ஆழ்ந்து விட்டிருந்தன. அமை தியின் அரவணைப்பு ஆட்சிபுரியும் அவ்வேளையிலே—ஒரே ஒரு வீட் டின் மாடியறை ஜன்னல் அவ்வீதியைச் சார்ந்தவாறு திறந்திருந்தது. மஞ்சணை ஒன்றிலே தங்கத்தை உருக்கி எடுத்தாற்போல் அங்க அமைப்புக்கொண்ட மங்கை யொருவள் ஒருக்களித்தும் படுத்த வண்ணம் நித்திரைக்கொள்ளாமல் ஏதோசிந்தனையில் மூழ்கியிருந் தாள்.

எங்கிருந்தோ ஒரு வெறிநாயின் ஓலம்......பேய்க்காற்றின் பொறுமல்......!

அழகொளியை அது காறும் வீசிக்கொண்டிருந்த "அம் புலி"யை கார்முகில் ஒன்று கவ்விக் கொண்டதால் கும்மிருட்டின் கோரத்தாண்டவம்! வரப்போகும் ஒரு பயங்கர நிகழ்ச்சிக்கு அவைகள் அறிவிப்பு கட்டியம் கூறிக் கொண்டிருந்தன.

சிந்தனைப் புரவியிலிருந்து விடுபட்ட அந்நங்கை வாரிசுருட்டிக் கொண்டெழுந்து ஜன்னலின் அருகே வந்து நின்றுக்கொண்டு நான்கு புறமும் வீதியை நோக்கி தனது கயல்விழியை செலுத் தினள். இருளோடு இருளாக இரண்டு உருவங்கள் மெல்லிய குரலில் என்னவோ பேசிக்கொண்டு மறைந்து மறைந்து தனது இல்லத்தைத் தாண்டிச் செல்வதை அவள் உணர்ந்தாள். ஏதோ

சதித்திட்டத்தோடு தான் அந்த இரு உருவங்களும் வந்திருக்கின்றனர் என்பதையும் உணர்ந்தாள். நெஞ்சம் படபடக்க, நிலைக்கொள்ளாமல் உடனயடியாக மாடியிலிருந்து கீழே இறங்கி வேகமாக ஓடி வந்து தெருவாயில் கதவைத்திறந்து அக்கத வோரமாக நின்றுக் கொண்டு அவ்வழிப்போக்கர் இருவரின் உரையாடல்களை கவனமாக செவிமடுத்தாள்.

என்னப்பா? வஹாப்! அந்த பயல் அமீருத்தீன் நேற்று மேடையிலே பேசியதைப் பார்த்தாயா? பெரிய அறிஞராக மாறிக் கொண்டு வரப்பார்க்கிறானே? அன்று அவனது பிரச்சாரத்திலே மயங்கி பந்தலே கிடுகிடுக்கும் வண்ணம் ஆரவாரமாக எல்லோரும் கைத்தட்டிக்கர கோஷம் செய்தபோது என்மனம் என்னபாடுபட்டது தெரியுமா? அவனோடு படித்த நமக்கெல்லாம் இந்த திறமை எதுவும் ஏற்படவில்லை...சும்மா இருக்கிறோம். அந்தப் பயலுக்கு மட்டில் அவ்வளவு மதிப்பு ஏற்படவா? அதைப்பார்த்துகொண்டு நாம் இனியும் மௌனம் சாதிக்கவா, ஒரு காலும் முடியாது. மேலும், நம்மிடம் அவன் பழகுவதில் கூட பற்பல மாறுதல்! அப்படிதான் கல்வியில் அவன் என்ன கைத்தேர்ந்து விட்டான்...? நாமெல்லாம் வெறும் செம்பறிஆட்டுக் கூட்டங்கள் என்றல்லவா அவன் நினைத்து விட்டான்...? லத்தீப்! ஏன் வீணாக ஆவியைப் போக்குகின்றாய்? அவனை இவ்வுலகிலிருந்து விடுதலைப் பெறச் செய்யத்தானே இப்பொழுது செல்கின்றோம். அமீருத்தீன் இன்னும் சில நிமிடங்களில் சமாதியை நோக்க வேண்டிய சவப்பட்டியலில் சேர்க்கப்பட்டு விடுவான். இது நிட்சயம்! நாளை அவனது விரும்பிகளின் "அனுதாப ஆலாபனத்தை"க் கேட்க உனது செவிகளைத்தீட்டிவைத்துக் கொள்! இப்பொழுது அவன் "இக்பால் தெரு" விலிருக்கும் "இஷா அத்தே—இஸ்லாம் இளைஞர்" சங்கத்தில் தான் படித்துக் கொண்டிருந்து விட்டு உறங்கிக் கொண்டிருப்பான். ஆனால்...... நம்முடைய அதிருஷ்டம் வேறு ஒருவரும் அங்குபடுத்திருக்கவில்லை என்றால் இந்தக் "கட்டாரி" அந்தக்கடமையைச் செய்து விடும். நமது திட்டத்திற்கும் ஒரு முடிவுகிடைத்து விடும். அவ்வழிப்போக்கர் இருவரிடையே நிகழ்ந்த விவாதங்கள் தான் இவை. (கதையில் தான் கற்பனை உவமை நயத்திற்காக இத்தகைய இரும்பு இதயங்கள் படைத்த வஹாபும்—லத்தீபும் நடமாடுவதாக வாசக நேயர்கள் எண்ணவேண்டாம். இவ்விருபதாம் நூற்றாண்டிலே—இஸ்லாத்தின் பெயரளவிலே—ஏகத்துவக் கொள்கை என்னும் உதட்டசைவிலே இனத்தோன் ஒருவனின் முன்னேற்றத்தைக்கண்டு! தனக்கு அத்தகைய ஆற்றல் இல்லாவிடினும் "எரியும் தீக்குழம்பாக" மாறி—இடையூறு விளைவிக்க கூடிய அளவிற்கு துணிந்து விட்ட ஆயிரமாயிரம் வஹாபுகளும்— லத்தீபுகளும் இருக்கத்தான் செய்கின்றனர்.)

இச்செய்தியால் மின்சாரத்தால் தாக்குண்ட நிலையடைந்தாள் அவள். ஒவ்வொரு கனமும் அவளது அகக்கண்களிலே அமீருத்தீனின் குறுநகைப்பார்வையும் அன்று மேடையிலே அவனது அதரங்கள் அசைத்த எழுச்சி உரைநடையும் மின்னலெனத் தோன்றி—தோன்றி மறைந்தன. அவனை அக்கயவர்களின் கோரக் கொலை முடிவிலிருந்து காப்பாற்ற வேண்டு மென்ற கடமைத் துடிப்பும்—இனம் தெரியாத ஓர் விதப்பரிவும் அவளது எண்ணக் குவியலிலே ஏக காலத்திலே இடம் பெற்று இரண்டறக்கலந்து பட்டு ஐக்கியமாயின. 'பர்தா' முறையினைப் பேண வேண்டிய அப் பாவைக்கு நடு நிசி நெஞ்சழுத்த மூட்டியது. சதியாளர் அவ்விரு வரையும் குறிவைத்து 'கொடுவாள்' ஒன்றை தற்காப்பின் நிமித்தம் தளிர்க்கரத்தில் தாங்கிய வண்ணம் பின்தொடர்ந்தாள் அவள்.

ஆயுதப்பாணியாக ஆவேசநடைப்போடும் அவ்வீராங்கனையின் அந்த நேரத் தீரக் காட்சி சரிதை வரலாற்றிலே செதுக்கி எடுக்கப் பட்ட "சாந்பீபி"! "ஜான்ஸி இராணி"—போன்ற மாதர்த் திலகங்களை நினைவுபடுத்தின. 'இஷா அத்தே—இஸ்லாம் இளைஞர்' சங்கத்திலே எதிரிகளின் எண்ண அலை மோதலுக்கேற்ப! தனிமை யாக அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான் அமீருத்தீன். இக் கோடைக்காலத்திலே குளுமையானத் தென்றலை அந்த கட்டிடம் வழங்குவதால் தற்காலிகமாக அவனது உறக்க ஸ்தலம் அதுவாக மாறியது. அவனுடன் அங்கு படுக்கும் இதர நண்பர்கள் இரண் டாவது காட்சி திரைப்படத்திற்கு ஏகியிருந்தனர். அமீருத்தீ னுக்கு இது போன்ற வேடிக்கை விநோதங்களில் சிறு பிராயத்தி லிருந்து ரஸிகத்தன்மை கிடையாது. மதப்பணியும்—இன அடிப் படை வணக்கங்களும் தான் அவனது விருப்பமான விளையாட்டுகள் என்று கூறலாம். கட்டிடத்தினுள் அடிமேல்அடி எடுத்து வைத்து உள்ளே சென்ற லத்தீபு இடுப்பிலிருந்த பளபளக்கும் கூறியக்கத்தி ஒன்றை எடுத்து உறங்கிக்கொண்டிருந்த அமீருத்தீனின் நெஞ் சுக்கு நேராய் உயர்த்தி குத்துவதற்கு குறிவைத்தான். அதேசமயத் திலே அந்தப் பெண்ணரசியின் கொடுவாள் லத்தீபுவின் முதுகிலே பாய்ந்தது. அம்மா......!என்று அலறியவண்ணம் அடுத்தகனம் கையில் பிடித்திருந்த 'கட்டாரி' யுடன் கீழே சாய்ந்தான் லத்தீப். அவனது முதுகிலிருந்து குபு......குபு வென்று குருதி கொட்டி தரையிலே வழிந்தோடிக்கொண்டிருந்தது. ஆம்? வினை விதைக்க நினைத்த அவனுக்கு விதிவகுத்த தண்டனைதான் அது. கண் ணிமைக்கும் நேரத்திலே நடந்து விட்ட அந் நிகழ்ச்சியின் அடிப் படை என்ன வெனில், வஹாபும்—லத்தீபும் கோரமுடிவினூடே சங்கக்கட்டிடத்தை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கும் போது. வேறு குறுக்குவழியாக அக்கட்டிடத்தை அடைந்து விட்ட அந்த யுவதி இருளான ஒரு பகுதியிலே மறைந்து கொண்டாள். கொடி

யச்செயலிலேயே குறிக்கோளாகச் சென்ற அவ்விருவரில் லத்தீப் அமீருத்தீனைச் சதிசெய்ய நெருங்கி விட்டான். வஹாப் யாராகிலும் வருகிறார்களா? என்று கவனிக்கும் தோரணையிலே சங்க வெளி வாயிலிலே காவலாக நின்றிருந்தான். அந்தப்பாவையைப் பற்றியோ! அவளால் தங்களுக்கு இவ்வாறு நேரும் என்பதைப்பற்றியோ, அவள் அங்கு இருப்பதைப்பற்றியோ முற்கூட்டியே அவர்கள் தெரிந்துகொள்வதற்கு நியாயமில்லை. சந்தர்ப்பம் இவர்களுக்குச் சதியும்—அதே நேரத்திலே அவளுக்குச் சாதகமும் செய்து விட்டிருந்தது. உள்ளே நோக்கிய வஹாபுவின் கண்களுக்கு அபாய அலறலுடன் கீழேசாய்ந்த தனது நண்பர் லத்தீபுவின் நிலைத் தளர்ந்த உடலைக் காணமுடிந்தது. அங்கு ஒளித் தந்துக்கொண்டிருந்த மின்சாரவிளக்கும் எங்கோ மெயின்லையினிலே பீசாகி அணைந்திருந்ததால் அங்கு ஏற்பட்ட கொந்தளிப்பை பிரத்தியட்சமாக காண முடியாத வஹாப் சமயத்திலே விழித்துக் கொண்ட அமீருத்தீனே லத்தீபைக் கொலைப்புரிந்து விட்டான் என்று முடிவு தனக்குள் தானே செய்து கொண்டு தன்னுயிரை வெல்லமாக மதித்துக்கொண்டு உடனடியாக அங்கிருந்து ஓட்ட மெடுத்தான்.

## அத்தியாயம்—2

# "கண்டதும் காதல்"

நல்ல உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த அமீருத்தீன் தனக்கு அண்மையில் திடுமென பயங்கர சப்தம் ஒன்றைக் கேட்டு திடுக்குற்றுப் பதறி எழுந்தான். அமைதியோடு எங்கும் அந்தகாரம் நிலவியிருந்தது. விபரம் ஒன்றும் புரியமுடியாமல் கை, கால்கள் நடுங்க தீக்குச்சியை எடுத்து பற்றவைத்து தற்காலிகமாக அங்கொரு யிடத்தில் வைத்திருந்த (மண் ணெண்ணெ சிமினி) விளக்கை ஏற்றினான். என்ன ஆச்சரியம்! கரத்திலே கட்டாரி! முதுகிலே மூன்று அங்குல ஆழமான காயத்துடன் பிரக்ஞை இழந்து சிறுதிணறல் மூச்சுடன் சுவாசம் வெளிப்பட செங்குருதி வெள்ளத்திலே வஹாப் மிதந்து கிடக்க, அவனது பக்கத்திலே கண்களிலே கனல் தெறிக்க சீற்றத்தின் சிகரமாக புவன மோகினி ஒருவள் கரத்திலே குருதித்தோய்ந்த கொடுவாளுடன் பைந்தமிழ் பரம்பரையின் பத்தினிக் கண்ணகியாக மாறி நிற்க—அந்த ஒயிலாளை உற்று நோக்கினான் அமீருத்தீன். அவளும் மௌனியாகி அவனையே கூர்ந்து நோக்கினாள். அவளது கன்னத்தின் ஒரு பகுதியிலே இருந்த 'சிறுமச்ச வடு' ஒன்று அவனது சிந்தனையிலே துரிதமாக வேலை செய்ய வாரம்பித்தது. சிறிது நேரமௌனத்திற்குப் பின்னர்—தங்கள் பெயர் ஆயிஷா தானே......?

என்றொரு கேள்வியைப் போட்டான் அவன். ஆயாச மேலீட்டால் மெய்மறந்த நிலையில் அது காறும் நின்றிருந்த அவள் சற்று நிதானத்தை வரவழைத்துக் கொண்டு முகம் சிவக்க தலைக்குனிந்தவாறு நாணம் கலந்த தொனியில் ஆம்... என்று பதிலிறுத்தாள் அவள். தனது நெற்றியின் நடுவிலே காலணா அளவிற்கு பதிந்திருந்த 'தழும்பு' ஒன்றை தனது வலது கரத்தால் ஒரு முறைதடவி விட்டுக் கொண்ட அவன் நீண்ட தொருபெருமூச் செறிந்தான். மறைந்து விட்டமாணவக்காலம் மீண்டும் விரைந்து வந்து அவனது கண்ணெதிரில் காட்சிதந்தது.

முத்தவல்லி (காட்டாண்மை) மொய்தீன் பிச்சை ராவுத்தரின் ஒரே புதல்விதான் ஆயிஷா. வேதப் போதனையாம் 'குர்ஆன்' பயிற்சிபெற "அஹமதிய்யா" அரபி மத்ரஸாவிலே சேர்க்கப்பட்ட போது அதேபயிற்சி துறையில் அந்த வளவனூரின் ஜும்ஆ மஸ்ஜிதின் பொறுப்பும்—கண்ணியமும் வாய்ந்த (முஅஸீனாக) நியமனம் பெற்ற அப்துல்லாவின் ஏகப்புதல்வனாகிய அமீருத்தீனும் ஆயிஷாவோடு ஒரே சமமான அந்தஸ்திலே பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்பொழு தெல்லாம் அவர்கள் சிறுவர்கள். மண்வீடு கட்டி, மர பொம்மையை அதில் வைத்து அச்சிலைகளின் சார்பாக—தாங்களே மனிதப்பாஷையைப் பரிமாறிக்கொண்டு மகிழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த மாணவமணிகளும் கூட; ஆனல்...இன்று பருத் தறிவுப் பூத்துக்குலுங்கும் பாலியர்கள் அவ்விருவரும். அன்றும்—இன்றும் என்னும் தொடரிலே நாம் கண்ட உண்மையான இயற்கையின் மாறுதல் இவைத்தான்.

கால வெள்ளம் கரைப்புரண்டோடியது. பருவஎழில் சிந்தும் ஆயிஷா பாவை உருவானள். பள்ளிப்படிப்பும் ஓரளவிற்கு நல்லதொரு வரையறையை அரபி, ஆங்கிலம், தமிழ் ஆகியவைகளுடன் அவளுக்கு அளித்து விட்டது. அமீருத்தீனுக்கும் தன் முயற்சியால் அப்படித்தான் எனினும், தளராத ஊக்கம் அவனை நேர்ந்த ஒரு அறிவாளனாக மாற்றியது. அமீருத்தீனும்—ஆயிஷாவும் இளமைக்காலம் தொட்டு இணைந்தப்பாச முடையவர்கள்! அரசனும்—ஆண்டியும் ஒன்றே என வழங்கும் அப் போத இஸ்லாத்தின் அடிப்படையிலே அவதார மெடுத்தவர்கள்! சர்வாதிகாரம் பெற்று விட்ட அசைக்க இயலாத அஸ்திவாரத்தினுள் வீற்றிருக்கும் சமுதாய நடைமுறை கூண்டுக்கிளியாக குடும்பக்கட்டுப்பாட்டிலே இப்பொழுது அடைப்பட்டுக் கிடக்கும் ஆயிஷாவுக்கும்; கற்றதின் பயனய் மற்றவைகளை அலசி, ஆராய்ந்து ஆத்மீகப் பணியாற்றும் அமீருத்தீனுக்கும் ஏற்றத்தாழ்வுகள் எண்ணிலடங்கா. "கருநிறத்து ஹபஷியரை—பெரும் குலத்தின் குறைஷியரை—பொறுத்த மான உவப்பினிலேபிணைத்து விட்ட நாயகமே"! என்று பெருமானர்

18707

(ஸல்) அவர்களின் பெருமைகளைப் பாக்களாக வரைந்து பெரிமிதத்தினூடே நெஞ்சம் கனிந்துருகிப்பாடும் 'கவிஞர் கபூரின்' உண்மைக் கண்ணோட்டத்திற்கு—செயலின் சிறப்பிற்கு சான்றுகாண முடியாத இக்காலத்திலே—ஆயிஷா; அமீருத்தீன் 'வாழ்க்கை இலக்கணத்திலே' விதிவிலக்கும் வேறுளதோ? சிறுபிராயத்திலே வழக்கம் போன்று அதிகாலையிலே அவள் குளக்கரைக்கு குளிப்பதற்காகச் சென்றிருந்த போதுதான் அந்த பயங்கர விபத்து நேர்ந்தது. ஆம்... அந்நிகழ்சி இன்றும் கூட அமீருத்தீனின் அகக்கண்ணிலே ஒரு சலனப்படக்காட்சி யாகத் தோன்றத்தவறவில்லை.

பல செங்கற்படிகளைக் கொண்ட அப்பெரும் குளத்திலே குளித்துக் கொண்டிருந்த சிறுமி ஆயிஷா; கால் தடுமாறி நடு ஆழத்தில் மூழ்கி தத்தளித்துக் கொண்டிருந்தாள். அந்த சமயத்திலே அங்கு அமீருத்தீனைத் தவிர வேறு ஒருவருமில்லை. பார்த்ததுதான் தாமதம்......குளக்கரை ஆரம்பப்படியில் நின்றிருந்த அவன் ஒரே பாய்ச்சலில் நீரில் குதித்து நீந்திச் சென்று அவளது உயிரைக் காப்பாற்றினான். அப்பொழுது அவசரமாக அவன் பாய்ந்த வேகத்தில் ஏதோ ஒருபடியில் அவனது நெற்றி மோதியதால் செங்குருதியுடன் அங்கு ஒரு சிறுகாயம் ஏற்பட்டு விட்டது. அதை கூட அவன் பொருட்படுத்தாமல் அந்த தியாகத்தை அவன் செய்தான். அந்த ஒரு சம்பவமே ஆயிஷாவுக்கு அமீருத்தின் மீது பெரிய தொரு பற்றுதலை உண்டாக்கி வைத்து விட்ட் தெனக்கூறலாம். ஆண்டுகளின் அசுரவேகத்திலே அவர்களிடையே மறதியும்—மாறுதலும் ஏற்படத்தான் செய்தன.

இத்தகைய எண்ண ஓட்டத்திலே ஈடுபாடுக்கொண்டிருந்த அமீருத்தீன் திடுமென விடுபட்டு; முகவிதானத்திலே ஓர்விதத் திகைப்பு மேலிட இது என்ன அலங்கோலம்......? என்றும் பாணைப் பிடிக்கும்கை—பிறகு 'பேனா' ப்பிடித்து பண்பட்டிருப்பதைப் பார்த்திருக்கின்றேன்—படித்து மிருக்கின்றேன். ஆனால்; இப்பொழுது என்கண்களின் எதிரிலேயே (வளையல்) குலுங்கவேண்டியக் 'கை' வாள்பிடித்திருப்பது விந்தையிலும் விந்தைதான் என்று வார்த்தையை ஆரம்பித்தான். அவற்றில் சிரிப்பும்—சிந்தனையும் இரண்டறக்கலந்திருந்தன.

"தாங்கள் எண்ணுவது போன்று இது விந்தைக் குரியவிஷயமல்ல. வேதனை நிறைந்த விஷயமாகும். பிறர்து வளமான முற்போக்கிலே பொறுமைக் கொண்டு குறிக்கிட்டு, கொலைப்புரியும் அளவுக்கு கொள்கை சருகிவிடும் கொடுமதியாளர்களின் கொட்டங்களை மட்டம் தட்ட வேண்டிய அவசியம் நேர்ந்தால் வனிதையர் மட்டு மென்ன? வேதாந்தியும் கூட வாளேந்தித்தான் ஆகவேண்டும்."

என்று அமைதியாக பதில் தந்தாள் ஆயிஷா. அந்த விளக்கத்தில் பெண்மையின் பரிவும்—உண்மையின் நிறைவும் பிரிதிப்பலித்தன.

"பலே! உவமைகள் பிரமாதம் அதிருக்கட்டும். இந்த அர்த்த ராத்திரியிலே இங்குவந்து லத்தீபைக் கோரக் கொலைப்புரிந்தீர்களே அதன் காரணம்? இங்கு அவன் எப்படி வந்தான்; தாங்கள் எப்படி வந்தீர்கள் விபரம் விளங்கமுடியவில்லையே?" என்று கேட்டான் அவன். மாநாட்டு மன்றத்திலே—மாதர்ப்பகுதியிலே பார்வையாளர்களில் நானும் ஒருவளாக அமர்ந்திருந்து தங்களின் பொன்னுரைகளைக் கேட்டு ரஸித்தேன்.

(தொடரும்)

---

குறிப்பு:—மீலாது கூட்டங்களிலோ, அல்லது மவ்லீது ஷரீபின் இறுதியிலோ தகுந்த ராகத்தை யமைத்து படிக்கவும்.

(மதுரை கபீர்)

மக்காவிலுதித்த— ஷாஹா ரஸூலே
அருளே நிறைந்த— முஹம்மது ரஸூலே.

உலகத்தில் சாந்தி— சமாதானம் ஓங்க
வாழ்க்கை யனைத்தும்— தத்தம் செய்தாரே
வள்ளல் முஹம்மது— அருமை ரஸூலே!

இருள் சூழ்ந்த உலகை— ஜொலிக்கச் செய்தாரே
நன்மைகள் எங்கும்— பரவச் செய்தாரே
அண்ணல் முஹம்மது— ஏகன் ரஸூலே!

ஹிரூக் குகையில்— வருடங்கள் கழித்தார்.
தொழுகையும் நோம்பும்— தவத்தில் கழித்தார்
என்னென்று புகழ்வோம்— நபிகள் ரஸூலே!

வானங்கள் கடந்து— செல்லத் துணிந்தார்
தனியாக அர்ஷை— சென்று அடைந்தார்
அல்லாவைக் கண்டு— மகிழ்ந்தார் ரஸூலே!

இஸ்லாத்தை எங்கும்— பரவிடச் செய்தார்
உண்மை சகோதரத்வம்— புவியில் அமைத்தார்
ஹபீபே குதாவே— நபியே ரஸூலே!

ஹாஷிம் குலத்தில்— உதித்த மகானே
ஒப்பற்ற நபியே— மன்னர் பிரானே
துஆக்கள் கபீரின்— ஏற்பீர் ரஸூலே!

# இஹ்யா உலூமுத்தீன்
# மொழி பெயர்ப்பு

புதிய இரண்டாம் பதிப்பு

(தமிழ்)

இஸ்லாமிய சன்மார்க்க ஞானப் பொக்கிஷமாய் விளங்குவது இமாமுல் மஃரிபத் வத்தரீகத் ஹஜ்றத் இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அரபு பாஷையில் இயற்றிய இஹ்யா உலூமுத்தீன் என்னும் பாரதூரமான கிரந்தம். அது மௌலவி ஆலிம்களுக்கு மதரஸாக்களில் கற்பிக்கப் படுத்துவது யாவரும் அறிந்த விஷயம். அந்த அற்புதமும் மகிமையும் வாய்ந்த இஸ்லாமிய ஞானமார்க்க நூலின் மொழி பெயர்ப்பே இந்த இஹ்யா உலூமுத்தீன் ஆகும். அரபு உர்தூ தெரியாத தமிழ் முஸ்லிம்களும், இஸ்லாமிய அனுஷ்டானத் தத்துவ ஞானங்களையும், இக்கித்தாபின் வாயிலாய் ஐயமறத் தெரிந்து கொள்ளலாம். இதில் ஷரீஅத், தரீகத், மஃரிபத், ஹகீகத் என்னும் நான்குவித மார்க்கங்களும் விளக்கப்பட்டிருக்கிறது. ஈமான், இஸ்லாம், அகீதா, ஹதீஸ், தலீல் முதலிய ஆதாரங்களோடு, இஸ்லாம் மதானுஷ்ட சட்டதிட்ட பர்ளு, ஸுன்னத்து, முஸ்தஹப்பு, மக்ரூஹ், ஹராம் முதலிய மஸ்அலாக்களெல்லாம் இந்நூலின் கண், மிகத் துலாம்பரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. இதன் பெருமை எழுதிச் சொல்லித் தெரியக் கூடியதில்லை. இந்த நூலினைக் கையில் எடுத்துப் படித்துப் பார்த்தாலே தெரியவரும்.

நெடு நாட்களுக்குப் பிறகு இந்நூல் அச்சாயிருப்பதால் பிரதிகளுக்கு ஆர்டர் தர முந்திக் கொள்ளுங்கள்.

விலை ரூ. 5—00

---

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
**நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.**

# தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

((ரஹ்மத் பாகவி))

## பெண்களின் தொழுகை பற்றிய சில ஹதீது ஆதாரங்கள்

'ஷரீஅத்தே முஹம்மதீ' என்னும் இஸ்லாமிய சன்மார்கத்தில், ஆண்களுடைய தொழுகையிலும் பெண்களுடைய தொழுகையிலும், எவ்வித வித்தியாசமும் கிடையாது; எனவே, ஆண் பிள்ளை எவ்விதம் தொழுதுக் கொள்கிருனே அவ்விதமே, பெண் பிள்ளையும் தொழுதுக் கொள்ளவேண்டும்.

‡ ஆனல் சரீரத்தை மறைத்துக்கொள்ளும் புறச் செயலில் தான், சிறிது வித்தியாச மிருக்கிறது. அதாவது வயது வந்த (பாலிகான) பெண்பிள்ளை, தன் முழுசரீரத்தையும் உடையால் மறைத்துக் கொண்டு தொழவேண்டும். எனவே, முகாரவிந்தம், இருகரங்கள்—மணிக்கட்டுவரை, இதைத்தவிர்த்து மற்ற சரீரம் முழுவதையும், உடையாலும் போர்வையாலும் மூடி மறைத்துக் கொள்ள வேண்டியது கட்டாயக் கடமையாகும். மறைக்கவேண்டிய அங்கங்களில் ஏதேனுமொன்று அல்லது ஒரு பகுதி திறந்துக்கிடந்தாலும், பெண்களின் தொழுகை நிறைவேற மாட்டது. ஆகையால், தலைமயிர் திறந்து வெளிப்பட்டுக் கிடந்தாலும் தொழுகை கெட்டுப் போய்விடும்.

† மேலும் சரீரம் உள்ளிருந்து தெரியும் வண்ணம் மிக மெல்லிய துணி உடுத்தித் தொழுதுக் கொண்டாலும், பெண்களின் தொழுகை நிறைவேற மாட்டாது.

↑ பெண்கள் தொழுதுக்கொள்வதற்கு இன்ன மாதிரி உடை தான் வேண்டு மென்ற கட்டாய மில்லை. எனவே, மேலே தலையும் கீழே கணுக்கால்களும் மறையத் தக்கமுறையில், உள்ள ஒரு அங்கி (சட்டையும்) ஒரு மேல் போர்வையும் இருந்தாலும் போதும்.

தொழுகையாளியாகிய நமாஜிப் பெண்களும் கியாமத்து நாளில், ஆண்களைப் போலவே, சுவர்க்கத்தின் சகல விதமான நிஃமத்து என்னும் அருட்பாக்கியங்களை அனுபவிப்பார்கள். பெண்களுக்கும் அல்லாஹுத் தஆலா, மிகப்பெரும் பதவிகளை அருள்

---

‡ புகாரி முஸ்லிம், திர்மதி, அபூதாவூத், இப்னுமாஜா

† அஹ்மத், அபூதாவூத், முன்தகி

↑ அபூதாவூத், முன்தகி,

புரிவான். சில உத்தமிப் பெண்கள் ஆண்பாலர்களைவிட மிக உயர்ந்த பதவியில், சுவர்க்க அருட்பாக்கியங்களைப் பெற்று, ஆண்களோடு சரிநிகர் சமானமாகப் பங்கெடுத்துக் கொள்வார்கள்.

‡ நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பதாவது:—"எந்தப் பெண்பிள்ளை ஐந்து நேரத் தொழுகைகளையும் சரியாக நிறை வேற்றுகிறாளோ, இன்னும் புனித ரமலான் மாதத்தில் நோன்புகளை நோர்க்கிறாளோ, இன்னும் தன்னுடைய மர்மஸ்தலத்தை (பாவங்களை விட்டும்) பாதுகாத்துக் கொள்கிறாளோ, இன்னும் கணவனுக்குப் பணிந்து நடந்து சேவைகள் செய்கின்றாளோ அவள், சுவர்க்க லோகத்திற்குள், எந்த வாயல்வழியாக வேண்டுமானாலும் பிரவேசிப்பாள்."

பெண்கள், பள்ளிவாசல் (மஸ்ஜித்) களில் போய் ஒதுக்கமாய் ஜமா அத்துடன் சேர்ந்து தொழுதுக் கொள்ள, தம் புருஷர்களிடம் அனுமதி கோரினால், அவர்களை ஒருபோதும் தடுத்துவைக்கக் கூடாது. ஏனெனில், "பெண்கள், மஸ்ஜித்களில் தொழுதுக் கொள்வதற்கு வேண்டிக் கொண்டால், (அனுமதி மறுத்து) அவர்களைத் தடுத்து வைக்காதீர்கள்" என்று நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருக்கிறார்கள்.

* "பெண்களை, இரவு காலங்களில், மஸ்ஜித்களில் தொழுதுக் கொள்ளப் போவதை விட்டும் தடுக்காதீர்கள்" என்று திருநபி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருப்பது வேறொரு ஹதீது மூலமும் ஸ்தாபிதமாகிறது.

† நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்)அவர்களுடைய ஜீவித காலத்தில், பெண்கள் ஸுப்ஹு தொழுகையை (மஸ்ஜிதில் வந்து) தொழுதுக் கொண்டு, இவர்கள் இன்னின்னாரென்று விளக்கமாய் தெரியும் முன் (வெளிச்சமாவதற்கு முன்னாடியே) தங்களுடைய வீடுகளுக்குப் போய் விடுவார்கள்.

நமது நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், பெண்களில் சிலர், வாசனை பூசிக்கொண்டு (அல்லது சிங்காரித்துக்கொண்டு பள்ளிவாசல்) மஸ்ஜித்களுக்குச் செல்கிறார்களே அவர்களைப் பற்றிப் பிரஸ்தாபித்து, நரகத்தைக் கொண்டு எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், பெண்களுடைய பர்தா முறையைப்பற்றி, அல்லாஹு தஆலாவும் தன் திருமறையாகிய குர்ஆன் ஷரீபில் பின்வருமாறு திருவுளமா யிருக்கின்றான்:—

"ஏநபியே, நீவிர் உமது மனைவிமார்களையும், புத்திரிகளையும், மற்றும் ஈமான் கொண்ட (முஸ்லிம்) பெண்மணிகளையும் நோக்கிக்

‡ திப்ரானி, தர்கீப்
* பத்ஹுல் பாரீ, (புகாரீ—விரிவுரை)
† பத்ஹுல் பாரீ, புகாரீ.

கூறி விடுவீராக 'அப்பெண்கள் முகமூடிகளையும் போர்வைகளையும் போர்த்திக் கொள்வார்களாக. இது, அவர்கள் யார் என்பதைப் பிறர் அறிந்துக் கொள்ளாதிருப்பதற்கு ஓர் அற்ப முறையாகும்......'' என்றும்,

* ''அப்பெண்கள், தங்கள் வீடுகளுக்குள் ‡தங்கி (பர்தாவில்) இருப்பார்களாக'' என்றும் அல்லாஹு தஆலா, கட்டளையிட்டிருக்கிறன்.

அபூ ஹுமைது ஸாஇதீ (ரலி) என்பவர், கண்ணியம் மிக்க முக்கிய ஸஹாபிகளில் ஒருவராக இருந்து வந்தார். ஒரு சமயம் அந்த ஸஹாபியுடைய மனைவி, நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் திருச்சமுகத்தில் வந்து ''நாயகமே! நான் தங்களுடன் (மஸ்ஜிதில் வந்து)தொழுதுக்கொள்ள விரும்புகிறேன்'' என்று கேட்டுக் கொண்டார். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், (அப்பெண்மணியை நோக்கி) ''இது எனக்கும் நன்ருய்த் தெரியும். ஆனல் நீ, அறைக்குள் இருந்து தொழுதுக்கொள்வது வெளித் தாழ்வாரத்தில் தொழுதுக் கொள்வதை விடச் சிறந்ததாகும். வெளித்தாழ்வாரத்தில் தொழுதுக் கொள்வது வீட்டு வெளி வாசலில் (ஸஹனில்) தொழுதுக் கொள்வதை விடச் சிறந்ததாகும். இது போல், மஹல்லாப் பள்ளிவாசலில் போய் தொழுதுக் கொள்வதைக் காட்டிலும் வீட்டு வெளிவாசலில் தொழுதுக் கொள்வது சிறந்ததாகும். மேலும் என்னுடைய மஸ்ஜித்தில் நீ வந்து தொழுதுக் கொள்வதைக் காட்டிலும் நீ, மஹல்லா மஸ்ஜிதில் போய் தொழுதுக் கொள்வது மேலாகும்'' என்று திருவுளமாகி, உபதேசத் தருளினர்கள்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், இப்படி உபதேசித்த பிறகு, அந்தப் பெண்மணி, தன்னுடைய வீட்டில் ஒரு மூலையை ஒதுக்கி, அதில் முஸல்லா ஏற்படுத்திக்கொண்டார். அதிலேயே தன் ஜீவிய காலமெல்லாம் தொழுதுக்கொண்டிருந்தார்.

† எந்தப் பெண்பிள்ளை, தன்னுடைய வீட்டுக்குள்ளே உள்ள அறையினுள் தொழுதுக்கொள்கிருளோ அவளுடைய தொழுகை, அல்லாஹு தஆலாவுக்கு மிகப் பிரியமானதும் விரும்பத் தக்கதுமாகும்'' என்று நாயகம் (ஸல்) அவர்கள்திருவுளமானதாக வேருெரு ஹதீதிலும் வந்திருக்கிறது.

இன்னமும், ''பெண்பிள்ளை, தன்னுடைய வீட்டு இருட்டு அறையினுள் தொழுதுக் கொள்வதில் தான் அல்லாஹு தஆலாவுடைய பொருத்தம் (திருப்தி) இருக்கிறது'' என்றும் நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமாயிருக்கிருர்கள்.

---

* குர்ஆன்: ஜுஸு 22, ஸூரா:அஹ்ஸாப், ருகூ, 8.
‡ குர்ஆன்: ஜுஸு 27: ஸூரா அஹ்ஸாப்; ருகூ 4
† தர்கீபு

**பாயிதா:**—மேலேபிரஸ்தாபிக்கப்பட்ட பலவகை ஹதீது ரிவாயத்து சம்பவ ஆதாரங்களைக் கொண்டு, ஆலிம் உலமாக்கள் தெரிவிக்கும் அபிப்பிராயம் யாதெனில்:—இக்காலத்துப் பெண்கள், மேற்படி ஹதீது போதனைக் கிணங்க, அமல் செய்வதே சாலச் சிறந்ததாகும். பெண்கள் கூடியமட்டும் வீட்டை விட்டு பகிரங்கமாய் வெளியே போகக்கூடா தென்பதே ஹதீதின் கருத்தாகும். அல்லது வயது சென்ற மூத்த பிராயப் பெண்கள் மட்டும் வெளிப்பட்டுப்போய், ஜமாஅத்துக் தொழுகையில், ஒதுக்கமாய் இருந்து கலந்து கொள்ளலா மென்றும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

முக்கியமாக, வாலிப வயதுப் பெண்கள், பள்ளிவாசல் (பொது மஸ்ஜித்) களுக்குப் போய் வருவதை கட்டாயம் தடுக்க வேண்டும். ஆயினும், இஷாத் தொழுகைக்கும் ஸுப்ஹு தொழுகைக்கும் மட்டும், இருட்டிலேயே போய், இருட்டிலேயே திரும்பி வந்துவிடும் நோக்கத்துடன் மஜ்ஜிதுக்குப் போக, பெண்கள் அனுமதி கோரினல் மறுக்கக் கூடாது என்பதும் மேற்படி ஹதீதினல் தெரிய வருகிறது.

‡ பெண்கள், தங்கள் கணவன்மாரின் உத்தரவு பெருமல் நபில் நோன்பு நோர்ப்பதும் விலக்கப்பட்டிருக்கிறது. ஏனெனின், "பெண்கள், தம் புருஷரின் உத்தரவில்லாமல் நபில் நோன் புவைக்க வேண்டாம்" என்று நபி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருக்கிருர்கள்.

---

‡ அபூதாவூத், இப்னுமாஜா, மிஷ்காத்


## ஸூறத்து யாஸீனும், துஆவும்

யாஸீன் ஸூராவுடைய அரபு ஆயத்துகளைத் தமிழ் எழுத்தைக் கொண்டு திருத்தமாய் ஓதும்படியான அமைப்புகளுடையதாகும் இந்த கிதாபு. இதில் பெரிய துஆவும், பாத்திஹா ஓத வேண்டிய தர்த்தீபுகளும், ஒவ்வொரு விஷயத்திற்கும் ஓத வேண்டிய துஆக்களும் **தல்கீனும்** அதன் தர்ஜுமாவும் அத்துடன் நாகூர் ஆண்டவர்கள் பேரில் அஸ்மாவுல் இலாமும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது.

விலை ந பை. 44

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ்-5.


Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

18707

# மாஜிக் என்னும் ஜால வித்தை.

மாஜிக், அல்லது ஜாலவித்தை செய்ய விரும்புகிறவர்கள், இந்த புஸ்தகத்தை உபயோகப் படுத்தலாம். இதில் அடங்கியுள்ள வித்தைகள்.

கைகுட்டையை கிழியச் செய்து, மறுபடியும் ஒன்றாக ஆக செய்வது, எரியச் செய்வது, சாம்பலை கைகுட்டையாக மறுபடியும் ஆக்குவது, வெறும் கையிலிருந்து கைகுட்டையை வரச் செய்வது, வெள்ளைக் குட்டைக்குப்பின் இரண்டு கைகுட்டைகளை வரச் செய்வது, எல்லாகைகுட்டைகளையும் மறையச்செய்வது, மறுபடியும் எல்லா கைகுட்டைகளையும் வரச்செய்வது, தனியாக ஒரு கைகுட்டையை கையிலிருந்து மறையச்செய்வது, கைகுட்டையின் நிறங்களை மாற்றுவது, கைகுட்டையை பில்லியர்டு பந்தாக மாற்றுவது, பில்லியர்டு பந்தை ஒரு கண்ணாடி தண்ணீர் டம்ளரில் மறையச் செய்வது, பந்தின் எண்ணிக்கைகளை அதிகப்படுத்துவது, பந்தின் நிறத்தை மாற்றுவது, சீட்டுக் கட்டிலிருந்து நினைத்த சீட்டை தானேமேலே எழும்பச் செய்வது, பூச்செண்டிலிருந்து நினைத்த சீட்டை எழும்ப செய்வது, நினைத்த சீட்டை புட்டிக்குமேலே தானே வரச்செய்வது, துப்பாக்கியால் நினைத்த சீட்டை கைகுட்டையில் ஒட்டச் செய்வது, மனதில் உள்ள சீட்டை வேறிடத்தில் வெளிவரச் செய்வது, சீசாவிலிருந்து நினைத்த கொடிகளை வரச்செய்வது, காகிதத்தில் உள்ள மோதிரங்களை சீசாவில் வரச்செய்வது, தொப்பியிலிருந்து ரூபாயை வரச்செய்வது, தட்டில் போட்ட ரூபாய்கள் அதிகமாவது, வெறும் கூடையில் பூக்களை தருவிப்பது, கையிலுள்ள கைகுட்டை டம்ளரிலும், டம்ளரில் உள்ள முட்டை கையிலும் வரச்செய்வது, நினைத்தசீட்டை நினைத்த ஆரஞ்சு பழத்தில் வரச் செய்வது, கையிலுள்ள குருவியுடைய கூடு மாயமாய் மறைந்து விடுவது, மனதிலுள்ளதை அறிவது, மந்திரத்தினால் [illegible] எழுதிய எண்களை கூட்டச்செய்தல், தொப்பியிலிருந்து நிறை எடைகள் நிறைய எடுப்பது, மந்திரக்கோலை அந்தரத்தில் நிறுத்துவது, தொப்பி, மேஜை, மந்திரக்கோல் இவைகளை கையில் தொட்டபடியே அந்தரத்தில் நிறுத்துவது, நாற்காலியில் உட்கார்ந்திருந்த கன்னை மறைந்து போவது, ஒருவனை சாக்கில்கட்டிப்போட்டு சீல்வைத்த பிறகு கட்டை அவிழ்க்காமல் சாக்கிலிருந்து வெளி வருதல், மனிதனுடைய தலையை அறுத்து ஒரு தட்டில் வைத்து சபையோர்க்கு காண்பித்த பிறகு மறுபடியும் தலையை வைத்து ஆளை உயிர்ப்பிக்கிறது, ஆளை உள்ளே வைத்து பூட்டின பெட்டியிலிருந்து ஆள் க்ஷணநேரத்தில் வெளிவந்து மறுபடியும் க்ஷணநேரத்தில் ஆள் பெட்டிக்குள் கட்டிய பைக்குள் செல்வது ஆகிய இவைகளும் இன்னும் கறுப்புக் கலையைப் பற்றியும் மற்றும் சில வித்தைகளும் இதில் விபரித்து இருக்கின்றன.

வித்தைகளை விபரிக்க படங்களும் அதிகமாக சேர்க்கப்பட்டு இருக்கின்றன.

இதன் விலை ரூபா. 1—12

## تبصير الحميد في تفسير القرآن المجيد

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

நமது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருக்குர்ஆனே உலக மக்கள் அனைவருக்கும் பொது வேதமாகவும், இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரமாகவும் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதாரமாயுள்ள திருக்குர்ஆனின் கட்டளைகளையும் அரிய போதனைகளையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். இஃது திருக்குர்ஆனின் **தப்ஸீரை** தமிழ் பாஷையில் **ஸுன்னத்து வல் ஜமாஅத்தின்** உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, எழுதப்பட்டது.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோபிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸுல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம்:** ஸூறத்து பாத்திஹா—பகறாவிலிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) $5\frac{1}{4}$ ஜுஸு வரை விலை ரூ. 10

**இரண்டாம் பாகம்:** ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தவ்பா முடிய விலை ரூ. 10

**மூன்றாம் பாகம்:** ஸூறே யூனுஸ் முதல் ஸூறத்துந் நஹ்ல் முடிய 7-ஸூறாக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

**நான்காம் பாகம்:** ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூறத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

**ஐந்தாம் பாகம்:** ஸூறத்து புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூராக்கள். விலை ரூ. 12

**ஆறாம் பாகம்:** அச்சாகிறது.

---

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ். 5